தினமணி

## விவசாயிகளுக்கு பண்ணை இயந்திரமயமாக்கல் பயிற்சி

First Published : 07 Jan 2010 06:40:10 AM IST

அரியலூர், ஜன. 6: விவசாயிகளுக்கு பண்ணை இயந்திரமயமாக்கல் பயிற்சி அளிக்கப்பட உள்ளது என்று அரியலூர் மாவட்ட ஆட்சியர் த. ஆபிரகாம் தெரிவித்தார்.

இதுகுறித்து ஆட்சியர் வெளியிட்ட செய்திக் குறிப்பு:

தமிழ்நாடு அரசு வேளாண்மைப் பொறியியல் துறையின் மூலம் விவசாயிகளுக்கு பண்ணை இயந்திரமயமாக்கல் பயிற்சி அளிக்க கீழ்க்கண்ட தலைப்புகளில் இருவாரப் பயிற்சி ஜனவரி 3-வது வாரம் முதல் அரியலூர் மாவட்டத்தில் 40 பேருக்கு நடைபெற இருக்கிறது.

பவர் டில்லர் இயக்குதல், பராமரித்தல், மேலாண்மை பயிற்சி, பம்ப் செட்டு, சொட்டு நீர் மற்றும் தெளிப்பு நீர் பாசனக் கருவிகள் பற்றிய பயிற்சி ஆகிய பயிற்சிகளில் சேர, 18 வயது முதல் 40 வயது வரையிலான விவசாயிகளிடமிருந்து விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன. பயிற்சியில் சேரும் விவசாயிகளுக்கு அரசு விதிகளின் படி, பயிற்சி முடிவின் போது உதவித் தொகை, சான்றிதழ் வழங்கப்படும்.

அரியலூர் பகுதிகளிலுள்ள விவசாயிகள் அரியலூர் அண்ணாநகரில் உள்ள வேளாண்மை பொறியியல் துறை அலுவலகத்தையும், ஜயங்கொண்டம் பகுதிகளிலுள்ள விவசாயிகள் ஜயங்கொண்டம்-சிதம்பரம் சாலையில் உள்ள வேளாண்மை பொறியியல் துறை அலுவலகத்தையும் தொடர்பு கொள்ளலாம் என்றார் அவர்.

## இயற்கை வேளாண் சாகுபடி முறை: அமெரிக்க மாணவ, மாணவியர் ஆய்வு

First Published : 08 Jan 2010 12:55:17 AM IST

உதகை ஜன. 7: இந்திய விவசாய முறைகளைக் குறித்த ஆய்வுக்காக தமிழகம் வந்துள்ள அமெரிக்க மாணவ, மாணவியர், உதகையில் இயற்கை வேளாண் சாகுபடி முறைகளைக் குறித்து நேரடி விளக்கம் பெற்றனர்.

சர்வதேச வேளாண்மை மற்றும் கிராம ஊரக வளர்ச்சி கல்வித் திட்டத்தின்கீழ் அமெரிக்காவிலுள்ள கார்னல் பல்கலைக்கழகத்தில் தொழிற்கல்வி பயிலும் மாணவ, மாணவியர் 30 பேர் தமிழகம் வந்துள்ளனர். இக்கல்வி திட்டத்தின்படி கோவை வேளாண்மை பல்கலைக்கழகம் மற்றும் அமெரிக்காவிலுள்ள கார்னல் பல்கலைக் கழகங்களுக்கிடையே இரட்டைப் பட்டப் படிப்பு படிப்பதற்கான புரிந்துணர்வு ஒப்பந்தம் உள்ளது. கடந்த 8 ஆண்டுகளாக இத்திட்டத்தின்கீழ் இரு நாட்டு மாணவ, மாணவியரும் பயனடைந்து வருகின்றனர்.

உலகளவில் வேளாண்மைத்துறை மற்றும் உணவுத்துறைகள் சந்தித்துவரும் சவால்கள் மற்றும் புதிய வாய்ப்புகளை அடையாளம் காண இந்த இரட்டை பட்டப்படிப்பு முறை பயன்படுகிறது. இந்த ஒப்பந்தத்தின்கீழ் 30 மாணவ, மாணவியர் தற்போது பயனடைந்து வருகின்றனர்.

இவர்களில் 13 பேர் தமிழகத்தை சேர்ந்தவர்களாவர்.

இவர்கள் கோவையில் பல்வேறு கள ஆய்வுகளை முடித்துவிட்டு வியாழக்கிழமை உதகை வந்தனர். உதகையில் கோவை வேளாண் பல்கலைக்கழகத்தின் இயற்கை வேளாண்மை பண்ணையில் ஆய்வு செய்தனர்.

அங்கு அவர்களுக்கு இயற்கை வேளாண்மை, பஞ்சகவ்யம் மற்றும் தசகவ்யம் உள்ளிட்டவற்றை தயாரிப்பது மற்றும் பயன்படுத்துவது போன்றவற்றிற்கான விளக்கங்களை பேராசிரியர் செல்வராஜ் அளித்தார்.

இந்த மாணவ, மாணவியர் இம்மாதம் 16ம் தேதி வரை இந்தியாவில் பல்வேறு பகுதிகளிலும் சுற்றுப்பயணம் மேற்கொள்கின்றனர். வயல்வெளி ஆய்வு, ஊரக வளர்ச்சி, வேளாண் விற்பனை மற்றும் விரிவாக்கம் போன்றவற்றைக் குறித்து இவர்கள் ஆய்வு மேற்கொள்கின்றனர். அத்துடன் இந்திய வயல்வெளி பிரச்னைகள், உணவு உற்பத்தி திறன் அதிகரிப்பு மற்றும் வேளாண் ஊக்குவிப்பு முைறைகளையும் இவர்கள் அறிந்து கொள்கின்றனர்.

இந்திய விவசாய முறைகளைக் குறித்து இவர்கள் நடத்தும் ஆய்வில் இந்தியா போன்ற வளரும் நாடுகளில் ஊரக வளர்ச்சித் திட்டங்களின் மூலம் கிராமப்புற வறுமையை ஒழிப்பதைக் குறித்தும் ஆய்வு நடத்துகின்றனர். இதனால் வளர்ந்த மற்றும் வளரும் நாடுகளிலுள்ள விவசாயிகளின் கலாசாரம் மற்றும் வாழ்க்கை முறை ஆகியவற்றைக் குறித்து நேரடியாக அறிந்து கொள்கின்றனர்.

உதகையில் இயற்கை வேளாண்மை முறை குறித்து அறிந்து கொண்ட இம்மாணவர்களிடம் அமெரிக்காவில் இயற்கை வேளாண் முறையின் செயல்பாடுகளைக் குறித்து கேட்டபோது, அமெரிக்காவில் வேறு விதமான முறை பின்பற்றப்பட்டாலும், அங்கு பெருமளவிலான விவசாயிகள் இயற்கை விவசாயத்தில் அதிக ஆர்வத்துடன் ஈடுபட்டு வருவதாக தெரிவித்ததோடு, இந்திய விவசாய முறைகள் தங்களுக்கு புதிய மற்றும் வித்தியாசமான அனுபவமாக உள்ளதாகவும் குறிப்பிட்டனர்.

உதகையில் மேலும் 4 நாட்கள் தங்கி இங்குள்ள விவசாய முறைகளைக் குறித்து இம்மாணவ, மாணவியர் அறிந்து கொள்ள உள்ளனர்.

### நெல்லுக்கு குவிண்டாலுக்கு ரூ. 1,500 வழங்கப்படுமா?

எஸ். கல்யாணசுந்தரம்

First Published : 06 Jan 2010 10:42:26 AM IST

திருவாரூர், ஜன. 5: அரிசி விலை கிலோ ரூ. 35-க்கு விற்றாலும், நெல்லுக்கு குவிண்டாலுக்கு ரூ. 1,500 விலை வழங்க வேண்டும் என்ற விவசாயிகளின் நீண்ட நாள் கோரிக்கை இன்னும் நிறைவேறாமல் இழுபறியிலேயே உள்ளது.

காவிரி டெல்டா பகுதிகளான தஞ்சாவூர், திருவாரூர், நாகை மாவட்டங்களில் நிகழ் பருவத்தில் சம்பா, தாளடி நெல் சாகுபடி ஏறத்தாழ 4.50 லட்சம் ஹெக்டேரில் மேற்கொள்ளப்பட்டுள்ளது. வடகிழக்குப் பருவ மழை பருவம் தவறிப் பெய்ததன் காரணமாக, பல்வேறு நிலைகளில் இருந்த நெல் பயிர்கள் பாதிக்கப்பட்டுள்ளதால், ஏறத்தாழ 30 சதவீதம் அளவுக்கு நெல் மகசூல் குறையும் என எதிர்பார்க்கப்படுகிறது.

இதில் முன்பட்ட சாகுபடி அறுவடைப் பணிகள் தற்போது தொடங்கி நடைபெற்று வருகின்றன. நெல் பொது ரகம் குவிண்டால் ஒன்று ரூ. 1,000-த்துக்கும், சன்ன ரகம் குவிண்டால் ஒன்று ரூ. 1,050-க்கும் நுகர்பொருள் வாணிபக் கழகத்தின் நேரடி நெல் கொள்முதல் நிலையங்கள் மூலம் கொள்முதல் செய்யப்பட்டு வருகின்றன.

தொடர் வறட்சி, வெள்ளம் காரணமாக, விவசாயத் தொழிலாளர் பற்றாக்குறையால் உயர்ந்துவிட்ட தொழிலாளர்களின் கூலி, விதை மற்றும் இடுபொருள்கள் உள்ளிட்டவற்றாலும் சாகுபடிச் செலவுகள் பலமடங்கு உயர்ந்து விட்டன. ஆனால், உற்பத்தி செலவுக்கேற்ப கொள்முதல் விலை உயர்த்தப்படாதது விவசாயிகளிடையே அதிருப்தியை ஏற்படுத்தியுள்ளது.

இதுகுறித்து தமிழ்நாடு நெல் விவசாயிகள் கூட்டமைப்பின் ஒருங்கிணைப்பாளர் ஆறுபாதி பி. கல்யாணம் கூறியது:

நெல், கரும்பு உள்ளிட்ட நாட்டின் அனைத்து விவசாய விளை பொருள்களுக்கும் உற்பத்திச் செலவுக்கு மேல் குறைந்தபட்சம் 50 சதவீதம் கூடுதலாக குறைந்தபட்ச கட்டுப்படியாகும் ஆதாய ஆதரவு விலை நிர்ணயிக்க வேண்டும் என, தேசிய விவசாயிகள் ஆணையம் பரிந்துரைத்துள்ளது. இதன்படி, நெல்லுக்கு குவிண்டாலுக்கு ரூ.1,800 வழங்க வேண்டும்.

உதாரணமாக, 1981ஆம் ஆண்டில் மத்திய அரசின் நெல் கொள்முதல் விலை குவிண்டால் ரூ. 120. அப்போது ஒரு ஜோடி ஆண், பெண் விவசாயக் கூலித் தொழிலாளர்களின் கூலி ரூ. 12. ஒரு குவிண்டால் நெல்லை விற்பனை செய்தால் 10 ஜோடி தொழிலாளர்களுக்கு கூலி வழங்க முடியும்.

ஆனால், தற்போது ஒரு ஜோடி தொழிலாளர்களுக்கு ரூ. 300 என்ற அளவில் கூலி உயர்ந்துள்ளது. இதன்படி பார்க்கும் போது, ஒரு குவிண்டால் நெல்லுக்கு தற்போது அரசு வழங்கும் விலையைக் கொண்டு 3 ஜோடிகளுக்கு மட்டுமே கூலி வழங்க முடியும். இதை அரசு கருத்தில் கொண்டு, இடைக்கால ஏற்பாடாக குவிண்டாலுக்கு ரூ. 1,500 விலை வழங்க வேண்டும் என்றார் கல்யாணம்.

கொள்முதல் நிலைய முறைகேடுகள்: நெல்லுக்கான விலை மிகவும் குறைவு என்பது ஒரு புறம் இருந்தாலும், நுகர்பொருள் வாணிபக் கழகம் மூலம் செயல்படும் கொள்முதல் நிலையங்களில் பல ஆண்டுகளாக பரவலாகக் காணப்படும் முறைகேடுகளாலும் விவசாயிகளுக்கு மேலும் இழப்பு ஏற்படுகிறது.

இந்த நிலையங்களில் உள்ள நெல் தூற்றும் இயந்திரத்தின் வடிவமைப்புக் கோளாறு காரணமாக, நல்ல நெல்லும் பதருடன் சேர்ந்து வெளியேறுகிறது. இந்த இயந்திரத்தின் வடிவமைப்பில் உரிய மாற்றங்கள் செய்ய வேண்டும். மேலும், எடையில் முறைகேடுகள் நடைபெறுகின்றன என்ற குற்றச்சாட்டின் காரணமாக, கொள்முதல் நிலையங்களுக்கு வழங்கப்பட்ட மின்னணு தராசுகளிலும் தில்லுமுல்லு செய்யப்படுகின்றன என்கின்றனர் விவசாயிகள்.

சட்டவிரோதமான தொகைப் பிடித்தம், கூடுதல் எடை வைத்தல் உள்ளிட்டவற்றால் குவிண்டால் ஒன்றுக்கு ரூ. 50 முதல் ரூ. 70 வரை விவசாயிகளுக்கு இழப்பு ஏற்படுகிறது. இதற்கு கொள்முதல் நிலைய ஊழியர்களுக்கு குறைவான

ஊதியம் மற்றும் பல நிலைகளில் அலுவலர்களுக்கு கையூட்டு அளிக்க வேண்டிய நிலை உள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

நிகழ் சம்பா, தாளடி பருவத்தில் டெல்டா மாவட்டங்களில் தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தில் நெல் கொள்முதல் இலக்கு 14 லட்சம் டன். இதன்படி, 14 லட்சம் டன் நெல் கொள்முதல் செய்யப்படும்போது விவசாயிகளுக்கு மொத்தம் ரூ. 70 முதல் ரூ.100 கோடி வரை இழப்பு ஏற்படுகிறது என்கிறார் ஆறுபாதி பி. கல்யாணம்.

இதைத் தவிர்க்கும் வகையில், நுகர்பொருள் வாணிபக் கழகத் தொழிலாளர்களின் தொழில் சங்கப் பிரதிநிதிகள், விவசாய சங்கப் பிரதிநிதிகள், வாணிபக் கழக உயர் அலுவலர்கள், அந்தந்த மாவட்ட ஆட்சியர்கள் கொண்ட கூட்டத்தைக் கூட்டி, முறைகேடுகளுக்கு முற்றிலுமாக முடிவு கட்ட வேண்டும் என்கின்றனர் விவசாயிகள். ஏற்கெனவே உரிய விலை கிடைக்காதது, இயற்கை இடர்பாடுகளால் ஏற்படும் மகசூல் இழப்பு ஆகியவற்றால் தொடர்ந்து பாதிக்கப்பட்டுள்ள விவசாயிகளுக்கு, பொங்கல் பரிசாக அரசு நெல் கொள்முதல் விலையை குவிண்டாலுக்கு ரூ.1,500 என நிர்ணயம் செய்ய வேண்டும். மேலும், ஈரப்பத அளவு உள்ளிட்ட தரக் கட்டுப்பாடுகளில் தளர்வு செய்து, கொள்முதல் செய்ய வேண்டும் என்பதுதான் விவசாயிகளின் ஒருமித்தக் கோரிக்கையாக உள்ளது

### மீன்வளக் கல்லூரியில் அலங்கார மீன்வளர்ப்பு பயிற்சி 20 ல் தொடக்கம்

First Published : 08 Jan 2010 06:00:34 AM IST
Last Updated : 08 Jan 2010 11:08:38 AM IST

தூத்துக்குடி, ஜன. 7: தூத்துக்குடி மீன்வளக் கல்லூரியில் நன்னீர் அலங்கார மீன்வளர்ப்பு பயிற்சி முகாம் வரும் 20-ம் தேதி தொடங்குகிறது. 22-ம் தேதி வரை நடைபெற உள்ள இப்பயிற்சி முகாமில் பல்வேறு நன்னீர் அலங்கார மீன் இனங்கள்,அவற்றின் உற்பத்தி மற்றும் அலங்கார மீன் பண்ணை மேலாண்மை குறித்த தொழில்நுட்பங்கள் செயல்முறை விளக்கங்களோடு நடத்தப்படவுள்ளன. பங்கேற்போருக்கு சான்றிதழ் வழங்கப்படும்.

கலந்து கொள்ள ஆர்வம் உள்ளவர்கள் 9443784479, 9443126894, 9894530161 ஆகிய செல்போன்களில் தொடர்பு கொண்டு விவரம் அறியலாம் என கல்லூரியின் முதல்வர் (பொறுப்பு) முனைவர் ஜே.டே. ஜேம்சன் தெரிவித்துள்ளார்.

### விழுப்புரம்: சம்பா விளைச்சல் அமோகம்

First Published : 08 Jan 2010 12:23:00 AM IST



விழுப்புரம், ஜன.7:  விழுப்புரம் மாவட்டத்தில் இந்த ஆண்டு சம்பா பருவத்தில் நெல் விளைச்சல் அமோகமாக உள்ளதால் ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்துக்கு விற்பனைக்கு வரும் நெல்வரத்தும் அதிகரித்துள்ளது. மேலும் மூட்டைக்கு ரூ.75 முதல் ரூ.100 வரை கூடுதல் விலையும் கிடைப்பதால் விவசாயிகள் மகிழ்ச்சியடைந்துள்ளனர்.

விழுப்புரம் மாவட்டத்தில் தற்போது பரவலாக பொன்னி, ஏடிடி 37, ஏடிடி 39, ஏடிடி 91, ஏடிடி 45, திருச்சி 1, பிபிடி ஆகிய நெல் ரகங்களை பயிரிட்டு வருகின்றனர். இதில் குண்டு ரக நெற்பயிர்களில் விளைச்சலுடன், விலையும் கூடுதலாக கிடைப்பதால் அந்த ரகங்களை பயிரிட்டு வருகின்றனர்.

கடந்த டிசம்பர் மாதம் முதல் விழுப்புரம் ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்துக்கு இதுவரை 20 ஆயிரம் நெல் மூட்டைகள் வந்துள்ளன. இதில் வியாழக்கிழமை மட்டும் 5,000 நெல் மூட்டைகள் வந்தன.

மேலும் மணிலா 8 குவிண்டால், பருத்தி 200 குவிண்டால், கம்பு 12 குவிண்டால், ராகி 4 குவிண்டால், பச்சைப்பயறு, காராமணி, தினை ஆகியவை தலா 2 குவிண்டால் என ஒரே நாளில் விற்பனைக் கூடத்துக்கு வந்தன.
இதுகுறித்து ஒழுங்குமுறை விற்பனைக் கூட கண்காணிப்பாளர் வி. சத்தியமூர்த்தி நமது நிருபரிடம் கூறியது: இந்த ஆண்டு முழுவதும் 3.50 லட்சம் நெல் மூட்டைகள் வரும் என்று எதிர்பார்க்கிறோம். இந்த பருவத்தில் மட்டும் 1.50 லட்சம் மூட்டைகள் வரும் என்று தெரிகிறது. கடந்த ஆண்டை விட இந்த ஆண்டு விளைச்சலும் அதிகம், விலையும் அதிகம் என்றார் அவர்.

செஞ்சி

செஞ்சி ஒழுங்கு முறை விற்பனைக் கூடத்தில் ஒரே நாளில் 10 ஆயிரம் நெல் மூட்டைகள் விற்பனைக்கு குவிந்ததால் இடம் பற்றாக்குறை ஏற்பட்டு விவசாயிகள் கடும் அவதிக்குள்ளாகி வருகின்றனர். இதனால் வியாழக்கிழமை செஞ்சி-திண்டிவனம் சாலையில் சுமார் 10 மணி நேரம் போக்குவரத்து முற்றிலுமாக தடைப்பட்டு வாகனங்கள் மாற்று வழியில் திருப்பி விடப்பட்டன.
விழுப்புரம் வேளாண் விற்பனை நிலையத்தில் குவிந்துள்ள நெல் மூட்டைகள்.

## தமிழகத்தில் இன்று மழை பெய்ய வாய்ப்பு

First Published : 08 Jan 2010 12:00:00 AM IST

சென்னை, ஜன. 7: ""தமிழகத்தில் வெள்ளிக்கிழமை மழை பெய்வதற்கான வாய்ப்பு உள்ளது'' என்று சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

÷இதுகுறித்து, வானிலை ஆய்வு மைய அதிகாரிகள் கூறுகையில், ""இலங்கையில் இருந்து தமிழகம் வழியாக தெற்கு ஆந்திரம் வரை காற்றழுத்தத் தாழ்வு நிலை பரவியுள்ளது.

இந்தத் தாழ்வு நிலையால் மாநிலத்தின் பல்வேறு பகுதிகளில் மழை பெய்யும்.

சென்னையில் வானம் மேக மூட்டத்துடன் காணப்படும். சில இடங்களில் லேசான மழை பெய்ய வாய்ப்பு உண்டு'' எனத் தெரிவித்தனர்.

## உணவுப் பொருள் பணவீக்கம் 18.22%

First Published : 08 Jan 2010 01:28:00 AM IST

புது தில்லி, ஜன.7: நாட்டில் உணவுப் பொருள் பணவீக்கம் ஜனவரி 3-ம் தேதியுடன் முடிவடைந்த வாரத்தில் 18.22 சதவீதமாக இருந்தது. முந்தைய வாரத்துடன் ஒப்பிடுகையில் தற்போது பணவீக்கம் 1.61 சதவீதம் குறைந்துள்ளது. இருப்பினும் உணவுப் பொருள்களின் விலை குறைந்ததாகத் தெரியவில்லை.

அத்தியாவசியப் பொருள்களின் விலை மற்றும் உருளைக்கிழங்கு உள்ளிட்ட காய்கறிகளின் விலை தொடர்ந்து உயர்ந்தே காணப்பட்டது. டிசம்பர் 26-ம் தேதியுடன் முடிவடைந்த வாரத்தில் உணவுப் பொருள் பணவீக்கம் 19.83 சதவீதமாக இருந்தது.

தொடர்ந்து பொருள்களின் விலை உயர்ந்துவந்த போதிலும் பிப்ரவரி மாதத்தில் பொருள்களின் விலை குறையும் என்று மத்திய அரசு நம்பிக்கை தெரிவித்துள்ளது.

மாநிலத்தின் பல பகுதிகளில் காணப்பட்ட வறட்சியின் தாக்கம் குறைந்துள்ளது. உணவுப் பொருள்களின் விலை அடுத்த மாதத்தில் குறையும் என எதிர்பார்ப்பதாக மத்திய திட்டக்குழு துணைத் தலைவர் மான்டேக் சிங் அலுவாலியா தெரிவித்தார்.

கடந்த ஆண்டில் உணவுப் பொருள் விலை ஏற்றத்துக்கு முக்கியக் காரணம் நாட்டின் பல பகுதிகளில் நிலவிய வறட்சி என்று அவர் தெரிவித்தார்.

உருளைக் கிழங்கின் விலை கடந்த ஆண்டைக் காட்டிலும் 110 சதவீதம் உயர்ந்துள்ளது. பருப்பு வகைகளின் விலை 42 சதவீதமும், காய்கறிகளின் விலை 30 சதவீதமும் உயர்ந்துள்ளது. டிசம்பர் 26-ம் தேதியுடன் முடிவடைந்த வாரத்தில் காய்கறிகளின் விலை 46 சதவீதம் உயர்ந்துகாணப்பட்டது. தற்போது 16 சதவீதம் குறைந்துள்ளதாக நிதி அமைச்சகம் தெரிவித்துள்ளது.

இருப்பினும் கோதுமை, அரிசி ஆகியவற்றின் விலைகள் குறையவில்லை என்று கிரிசில் தரச்சான்று மையத்தின் முது நிலை பொருளாதார வல்லுநர் டி.கே. ஜோஷி தெரிவித்தார்.

முந்தைய வாரத்துடன் ஒப்பிடுகையில் பதப்படுத்தப்படாத உணவு வகைகள் மற்றும் உணவு அல்லாத பிற பொருள்களின் விலை 14 சதவீதம் உயர்ந்து காணப்பட்டது. காய்கறிகள் மற்றும் பழங்களின் விலை 6 சதவீதம் குறைந்திருந்தது. பருப்பு வகைகளின் விலை 3 சதவீதம் வரை குறைந்திருந்தது.
இம்மாதம் 29-ம் தேதி ரிசர்வ் வங்கி தனது காலாண்டு ஆய்வறிக்கையை வெளியிட உள்ளது. பணவீக்கத்தைக் கட்டுப்படுத்த வட்டி அதிகரிப்பு நடவடிக்கை எடுக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.  குறைந்தபட்சம் 0.25 சதவீதம் முதல் 0.50 சதவீதம் வரை வட்டி உயர்த்தப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

### வளம் தரும் தேமோர் கரைசல்...

ஜி.சுந்தரராஜன்

First Published : 07 Jan 2010 01:42:07 AM IST

சிதம்பரம், ஜன.6: அதிக லாபம் பெற்று தரும் தேமோர் கரைசல் தயாரிப்பு மற்றும் பயன்பாடு குறித்து அண்ணாமலைப் பல்கலைக்கழக வேளாண் விரிவாக்கத்துறை விரிவுரையாளர் டி.ராஜ்பிரவீன் தெரிவித்துள்ளார்.
÷இது குறித்து அவர் தெரிவித்த விவரங்கள்: சில ஆண்டுகளாக குறைந்த செலவில் அதிக லாபம் பெற்றும் தரும் இயற்கை வேளாண் தொழில்நுட்பங்களிடம் நல்ல வரவேற்பு பெற்று வருகிறது.
÷குறிப்பாக விவசாயிகளிடம் உள்ள வேளாண் இடு பொருள்களை கொண்டு செய்யப்படுவதாலும், பின்விளைவுகள் இல்லாத காரணத்தாலும், நல்ல விளைச்சல் மற்றும் பூச்சித் தாக்குதலில் இருந்து பயிரைப் பாதுகாத்து அதிக லாபம் பெற்று தரும் தேமோர் கரைசல் தயாரிப்பு மற்றும் பயன்பாட்டில் பாரம்பரியம் மற்றும் முன்னோடி விவசாயிகள் அதிகளவில் ஈடுபட்டு வருகின்றனர்.
தேமோர் கரைசல் தயாரிப்பது எப்படி: தேங்காய்ப்பால், மோர் கலந்த இயற்கை கலவைதான் தேமோர் கரைசல் என்றழைக்கப்படுகிறது. நன்கு புளித்த மோர் 5 லிட்டரும் தேங்காய் எண்ணிக்கை 10-ம் இக் கரைசலுக்கு தேவைப்படும் பொருள்கள் ஆகும்.
÷விவசாயிகள் தேங்காயை துருவி அதனுடன் தேவையான அளவு நீர் சேர்த்து நன்கு கலக்கி 5 லிட்டர் தேங்காய்ப் பாலை எடுத்து மோருடன் நன்றாக கலக்கவும் இந்த கரைசலை மண்பானை அல்லது பிளாஸ்டிக் வாளியில் ஒருவாரம் வரை ஊறவிடவும். ÷இந்த கரைசல் மீது தூசி ஏதும் விழாமல் வைக்க வேண்டும். பின்னர் 7 நாள்கள் கழித்து கரைசல் நன்றாக புளித்திருக்கும். இதுதான் தேமோர் கரைசல் என்றழைக்கப்படுகிறது. ஒரு லிட்டர் தேமோர் கரைசலுடன் 10 லிட்டர் தண்ணீர் கலந்து பயிர்களுக்கு தெளிக்கலாம். ஒரு ஏக்கருக்கு தெளிப்பான் மூலமாக தெளிக்கும் போது 10 தெளிப்பான் அளவுக்கு தெளிக்க வேண்டும்.
பயன்கள்: தேமோர் கரைசலால் பயிர்களை நன்றாக வளரச் செய்யும் தன்மையும், பூச்சிகளை விரட்டும் தன்மையும் காண்படுவதால் விவசாயிகள் குறைந்த செலவில் அதிக லாபம் பெற முடியும்.
÷"சைட்டோசைம்' என்ற அழைக்கப்படும் பயிர் வளர்ச்சி ஊக்கி உள்ள ஆற்றலை தேமோர் கரைசலும் பெற்று உள்ளதால் நன்றாக வளராத பயிர்களின் வளர்ச்சிக்கு பெரிதும் உதவியாக இருக்கும்.
வேலைவாய்ப்பு: கிராமப்புற சுய உதவிக்குழு உறுப்பினர்கள், வேலை இல்லாத பட்டதாரி இளைஞர்கள் தேமோர் கரைசலை தயாரித்து விற்பனை செய்வதன் வாயிலாக வேலைவாய்ப்பு மற்றும் நல்ல லாபம் பெற முடியும். பல பெரும் நிறுவனங்களில் உள்ள தோட்டங்களில் தேமோர் கரைசல் தெளிக்க ஒப்பந்தம் செய்தும், பல பெரும் விவசாய நிலபரப்புகள் கொண்ட வேளாண் சங்கங்களுடன் இணைந்து தேமோர் கரைசல் உற்பத்தி மற்றும் பயன்பாடுகள் வாயிலாக சுற்றுச்சூழல் மாறுபாடுகளை தவிர்த்து அதிக லாபம் பெறலாம் என விரிவுரையாளர் டி.ராஜ்பிரவீன் தெரிவித்துள்ளார்.

## துவங்கியது மக்காச்சோளம் அறுவடை!

First Published : 08 Jan 2010 02:00:03 AM IST

Last Updated : 08 Jan 2010 10:05:44 AM IST

உடுமலை,ஜன.7: உடுமலை வட்டத்தில் மக்காச்சோளம் அறுவடை பணிகள் தீவிரம் அடைந்து வருகிறது. 100 கிலோ கொண்ட ஒரு மூட்டை ரூ.900 ற்கு விற்கும் நிலையில் ரூ.1000 மாக உயருமா என விவசாயிகள் எதிர்பார்த்து வருகின்றனர்.

உடுமலையில் நடப்பாண்டில் சுமார் 40 முதல் 50 ஆயிரம் ஏக்கர்கள் வரை விவசாயிகள் மக்காச்சோளத்தை பயிரிட்டுள்ளனர். 120 நாட்கள் பயிரான மக்காச்சோளத்தை கடந்த செப்டம்பர் மாதம் தொடக்கத்தில் விவசாயிகள் பயிரிட்டிருந்தனர். கடந்த மாதம் பெய்த தொடர்மழையால் மக்காச்சோளத்தில் புழுக்கள் தோன்றியதாலும், ஒரு சில தோட்டங்களில் ஒரே செடியில் 5,6 கதிர்கள் முளைத்ததாலும் விவசாயிகள் எதிர்பார்த்த மகசூல் கிடைக்குமா என அச்சம் அடைந்திருந்தனர்.

பொதுவாக உடுமலை, பல்லடம், திருப்பூர், பொங்கலூர் உள்ளிட்ட பகுதிகளில் அமைந்துள்ள தனியார் கோழிப்பண்ணைகளுக்கும் மற்றும் கால்நடை தீவன உபயோகத்திற்கும் ஆண்டு முழுவதும் மக்காச்சோளம் தேவை இருந்து வருகிறது. இந்நிலையில், ஜனவரி முதல் வாரத்தில் விவசாயிகள் பலத்த எதிர்பார்ப்புகளுடன் மக்காச்சோள அறுவடையை துவக்கி உள்ளனர். ஒரு ஏக்கருக்கு சராசரியாக 35 முதல் 40 மூட்டை கள் (ஒரு மூட்டைக்கு 100 கிலோ) அறுவடையாகி வரும் நிலையில் நல்ல விலை கிடைக்கும் என விவசாயிகளிடையே பலத்த எதிர்பார்ப்பு நிலவி வருகிறது. உடுமலை ஒழுங்கு முறை விற்பனைக் கூடத்தில் வியாழக்கிழமை நிலவரப்படி ஒரு மூட்டை 880-910 வரை விலை நிர்ணயம் செய்யப்பட்டு வருகிறது. கடந்த ஆண்டு இந்த பருவத்தில் விலை ஏறுமுகமாக இருந்ததால் மக்காச்சோளத்திற்கு இந்த ஆண்டும் ஏறுமுகமாக இருக்கலாம் என்ற எதிர்பார்ப்பில் ஒரு சில விவசாயிகள் அறுவடையை தள்ளிப்போட்டு வருகின்றனர்.

மேலும், நூறு நாள் வேலைத் திட்டத்தில் ஒரு நாள் ஊதியம் ரூ.100 ஆக உயர்த்தப்பட்டு விட்டதால் கூலியாட்கள் பற்றாக்குறையும் நிலவி வருகிறது.

இது குறித்து உடுமலை ஒழுங்கு முறை விற்பனைக் கூட கண்காணிப்பாளர் ஜி.நஞ்சப்பன் வியாழக்கிழமை கூறியது:

பொதுவாக ஜனவரி, பிப்ரவரி மாதங்கள் மக்காச்சோள சீசன் ஆகும். கூலி ஆட்கள் பற்றாக்குறையாலும், விலை ஏறும் என விவசாயிகள் எதிர்பார்த்து வருவதாலும் பொங்கலுக்குப் பிறகு தீவிர அறுவடை பணிகள் நடக்கும் எதிர்பார்க்கிறோம். ஆனாலும் புதன்கிழமை ஒழுங்கு முறை விற்பனைக் கூடத்திற்கு 480 மூட்டை வந்துள்ளது. இந்த சீசனில் இதுவரை 2500 மூட்டைகள் இங்கு வந்துள்ளது.

வியாழக்கிழமை நிலவரப்படி 100 கிலோ கொண்ட ஒரு மூட்டைக்கு ரூ.900 வரை விலை போனது. பொதுவாக கோழிப்பண்ணைகளுக்கு ஆண்டுதோறும் தேவைகள் இருப்பதால் விவசாயிகளுக்கு உறுதியாக இந்த விலை கிடைக்கும்.

இந்த விலை போதாது என்று நினைக்கும் விவசாயிகளுக்கு ஒழுங்கு முறை விற்பனைக் கூடத்தில் இருப்பு வைத்துக் கொள்ள பல்வேறு வசதிகள் செய்யப்பட்டுள்ளது. ஒழுங்கு முறை விற்பனைக் கூடத்தில் உள்ள 10 குடோன்களில் 4500 மூட்டைகள் வைத்துக் கொள்ள வசதி உள்ளது. விவசாயி கள் ஸ்டாக் வைக்கும் மக்காச்சோள மதிப்பில் 50 சதவிகித கடன் தொகை வெறும் 5 சதவிகித வட்டிக்கு வழங்கப்படும். இதில் முதல் 15 நாட்கள் இலவசமாக ஸ்டாக் வைத்துக் கொள்ளலாம். இந்த திட்டம் விவசாயிகளுக்கு பிடிக்கவில்லை என்றால் மக்காச்சோளம் இருப்பு வைத்துக் கொள்ள ஒரு குவிண்டாலுக்கு வெறும் 5 பைசா கொடுத்தால் போதும். எவ்வளவு மக்காச்சோளம் கொண்டு வந்தாலும் இருப்பு வைத்துக் கொள்ளலாம். அதற்கு இலவசமாக காப்பீடும் செய்து தரப்படும் என்றார்

### சர்க்கரை விலை ஒருவாரத்தில் கிலோவுக்கு ரூ. 5 உயர்வு

First Published : 08 Jan 2010 01:28:00 AM IST

புது தில்லி, ஜன.7: வெளிச்சந்தையில் சர்க்கரையின் விலை தொடர்ந்து உயர்ந்து வருகிறது. ஒரு வாரத்தில் சர்க்கரை விலை கிலோவுக்கு ரூ. 5 அதிகரித்து ரூ. 44-க்கு விற்பனையானது. இனிவரும் காலங்களில் இது மேலும் உயரும் என்று மொத்த விற்பனையாளர்கள் தெரிவித்துள்ளனர்.

டிசம்பர் 31-ம் தேதியன்று வெளிச் சந்தையில் சர்க்கரை விலை கிலோ ரூ. 39-க்கு விற்பனையானது. ஆனால் ஜனவரி 6-ம் தேதி ஒரு கிலோ சர்க்கரை விலை ரூ. 44 ஆக உயர்ந்துள்ளது.

கடந்த ஆண்டு தொடக்கத்தில் சர்க்கரை விலை கிலோ ரூ. 21-க்கு விற்பனையானது. ஆனால் ஓராண்டில் சர்க்கரை விலை இரண்டு மடங்குக்கும் அதிகமாக உயர்ந்துள்ளது. சர்வதேச சந்தையில் சர்க்கரை விலை அதிகரித்து வருவதும், உற்பத்தி குறைந்து தேவை அதிகரிப்பதும் விலை உயர்வுக்குக் காரணம் என்று தெரிகிறது.  சர்வதேச சந்தையில் விலை உயர்ந்ததால் இறக்குமதி செய்யப்படும் சர்க்கரை அளவு உயர்ந்துள்ளது. இதனால் விலை உயர்ந்ததாக இந்திய சர்க்கரை ஆலை அதிபர்கள் சங்க துணை இயக்குநர் எம்.என். ராவ் தெரிவித்துள்ளார்.

கடந்த ஒரு வாரத்தில் சர்வதேச சந்தையில் சர்க்கரை விலை டன்னுக்கு 20 டாலர் முதல் 25 டாலர் வரை அதிகரித்துள்ளது. இதனால் இறக்குமதி செய்யப்படும் சர்க்கரை விலை டன்னுக்கு 800 டாலராக உள்ளது. இந்திய மதிப்பில் ஒரு டன் சர்க்கரை விலை ரூ. 36,664 ஆகும்.   2008-09-ம் ஆண்டில் சர்க்கரை உற்பத்திப் பருவமான அக்டோபர்-செப்டம்பர் சீசனில் கரும்பு உற்பத்தி கணிசமாகக் குறைந்தது. நடப்பு சீசனிலும் உற்பத்தி குறைந்துள்ளது. 2009-10-ம் ஆண்டில் இந்தியா 1.47 கோடி டன் சர்க்கரை உற்பத்தி செய்யும் என மதிப்பிடப்பட்டுள்ளது. ஆனால் நாட்டின் தேவை 2.3 கோடி டன்னாகும்.

உள்நாட்டின் தேவையை சமாளிக்க கடந்த ஆண்டு ஏப்ரலிலிருந்து வெளிநாடுகளிலிருந்து சர்க்கரை இறக்குமதி செய்ய மத்திய அரசு அனுமதி அளித்துள்ளது. டிசம்பர் 15-ம் தேதி வரை வர்த்தகர்கள் 53 லட்சம் டன் சர்க்கரையை இறக்குமதி செய்யப்பட்டுள்ளது. மேலும் 20 லட்சம் டன் சர்க்கரை இறக்குமதி செய்யப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

### உணவுப் பொருள் பணவீக்கம் 18.22%

First Published : 08 Jan 2010 01:28:00 AM IST

புது தில்லி, ஜன.7: நாட்டில் உணவுப் பொருள் பணவீக்கம் ஜனவரி 3-ம் தேதியுடன் முடிவடைந்த வாரத்தில் 18.22 சதவீதமாக இருந்தது. முந்தைய வாரத்துடன் ஒப்பிடுகையில் தற்போது பணவீக்கம் 1.61 சதவீதம் குறைந்துள்ளது. இருப்பினும் உணவுப் பொருள்களின் விலை குறைந்ததாகத் தெரியவில்லை.

அத்தியாவசியப் பொருள்களின் விலை மற்றும் உருளைக்கிழங்கு உள்ளிட்ட காய்கறிகளின் விலை தொடர்ந்து உயர்ந்தே காணப்பட்டது. டிசம்பர் 26-ம் தேதியுடன் முடிவடைந்த வாரத்தில் உணவுப் பொருள் பணவீக்கம் 19.83 சதவீதமாக இருந்தது.

தொடர்ந்து பொருள்களின் விலை உயர்ந்துவந்த போதிலும் பிப்ரவரி மாதத்தில் பொருள்களின் விலை குறையும் என்று மத்திய அரசு நம்பிக்கை தெரிவித்துள்ளது.

மாநிலத்தின் பல பகுதிகளில் காணப்பட்ட வறட்சியின் தாக்கம் குறைந்துள்ளது. உணவுப் பொருள்களின் விலை அடுத்த மாதத்தில் குறையும் என எதிர்பார்ப்பதாக மத்திய திட்டக்குழு துணைத் தலைவர் மான்டேக் சிங் அலுவாலியா தெரிவித்தார்.

கடந்த ஆண்டில் உணவுப் பொருள் விலை ஏற்றத்துக்கு முக்கியக் காரணம் நாட்டின் பல பகுதிகளில் நிலவிய வறட்சி என்று அவர் தெரிவித்தார்.

உருளைக் கிழங்கின் விலை கடந்த ஆண்டைக் காட்டிலும் 110 சதவீதம் உயர்ந்துள்ளது. பருப்பு வகைகளின் விலை 42 சதவீதமும், காய்கறிகளின் விலை 30 சதவீதமும் உயர்ந்துள்ளது. டிசம்பர் 26-ம் தேதியுடன் முடிவடைந்த வாரத்தில் காய்கறிகளின் விலை 46 சதவீதம் உயர்ந்துகாணப்பட்டது. தற்போது 16 சதவீதம் குறைந்துள்ளதாக நிதி அமைச்சகம் தெரிவித்துள்ளது.

இருப்பினும் கோதுமை, அரிசி ஆகியவற்றின் விலைகள் குறையவில்லை என்று கிரிசில் தரச்சான்று மையத்தின் முது நிலை பொருளாதார வல்லுநர் டி.கே. ஜோஷி தெரிவித்தார்.

முந்தைய வாரத்துடன் ஒப்பிடுகையில் பதப்படுத்தப்படாத உணவு வகைகள் மற்றும் உணவு அல்லாத பிற பொருள்களின் விலை 14 சதவீதம் உயர்ந்து காணப்பட்டது. காய்கறிகள் மற்றும் பழங்களின் விலை 6 சதவீதம் குறைந்திருந்தது. பருப்பு வகைகளின் விலை 3 சதவீதம் வரை குறைந்திருந்தது.

இம்மாதம் 29-ம் தேதி ரிசர்வ் வங்கி தனது காலாண்டு ஆய்வறிக்கையை வெளியிட உள்ளது. பணவீக்கத்தைக் கட்டுப்படுத்த வட்டி அதிகரிப்பு நடவடிக்கை எடுக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. குறைந்தபட்சம் 0.25 சதவீதம் முதல் 0.50 சதவீதம் வரை வட்டி உயர்த்தப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

**இறால் ஊறுகாய் தயாரிப்பு பயிற்சி**

First Published : 08 Jan 2010 12:26:18 AM IST

புதுச்சேரி ஜன. 7: சுயஉதவிக்குழு பெண்களுக்கு புதுச்சேரி பெருந்தலைவர் காமராஜர் வேளாண் அறிவியல் நிலையத்தில் இறால் மற்றும் மீன் ஊறுகாய் தயாரிக்கும் பயிற்சி அளிக்கப்பட்டது.

÷இப் பயற்சியை நிலைய முதல்வர் அ.ராமமூர்த்தி தொடங்கி வைத்தார். அரும்பார்த்தபுரம், அரியாங்குப்பம், ஐயங்குட்டிப்பாளையம், லாஸ்பேட்டை போன்ற பகுதிகளைச் சேர்ந்த 25 பெண்கள் பயிற்சி பெற்றனர். இந் நிலையத்தின் விரிவாக்கத்துறை நிபுணர் குமார் ஏற்பாடுகளைச் செய்திருந்தார்.

÷மீன்களை கெடாமல் பாதுகாப்பது, கையாளும் முறைகள், மீன் தரத்தை மதிப்பிடுதல், மீன் பதனிடும் முறைகளான உப்பிட்டு உலர வைத்தல். குளிர்பதனம் செய்தல், உறைபதனம் செய்தல், கலனில் அடைத்தல், புகைப்பதனம் செய்தல் போன்றவை குறித்து மீன்வள நிபுணர் வ. திருமூலன் விளக்கினார்.
÷மீன் மற்றும் இறால் ஊறுகாய் தயாரித்து மீன் பொருள்களுக்கு மதிப்பூட்டும் முறைகள் விளக்கப்பட்டன.

### கரும்பு விவசாயிகள் வாழ்வு இனிக்குமா?

ஜி.விஜயகுமார்
First Published : 08 Jan 2010 01:03:48 AM IST
Last Updated : 08 Jan 2010 10:05:59 AM IST

ஓமலூர், ஜன. 7: தமிழக அரசின் பொங்கல் பரிசுத் திட்டத்துக்கு வெல்லம் கொள்முதல் செய்யப்படும் என்ற நம்பிக்கையில்தான் சேலம் மாவட்ட கரும்பு விவசாயிகள், வெல்லம் தயாரிப்பாளர்களின் பொங்கல் கொண்டாட்டங்கள் அடங்கியுள்ளன.

சேலம் மாவட்டம் ஓமலூர் வட்டாரத்தில் காமலாபுரம், சர்க்கரை செட்டிப்பட்டி, கருப்பூர், தும்பிபாடி, வெள்ளாளப்பட்டி, தேக்கம்பட்டி மற்றும் மூங்கில்பாடி அதன் சுற்றுப் பகுதிகளில் சுமார் 5 ஆயிரம் ஏக்கரில் கரும்பு பயிரிடப்படுகிறது. இங்கு ரோஸ் கரும்பு, போண்டா கரும்பு, பச்சை கரும்பு, ரஸ்தாளி கரும்பு, பனி கரும்பு உள்ளிட்ட பல்வேறு வகையான கரும்பு ரகங்கள் பயிரிடப்படுகின்றன.

கடந்த ஆண்டு வரை மஞ்சள் பயிரிட்டு வந்த இப்பகுதியைச் சேர்ந்த ஒரு சில விவசாயிகளும் தமிழக அரசு பொங்கல் பரிசாக அரிசி, வெல்லத்தை கடந்த ஆண்டு வழங்கியதை அடுத்து, அதிக லாபம் பெறலாம் என்ற ஆசையில் இப்போது கரும்பு பயிரிட்டுள்ளனர்.

இப்பகுதியில்தான் சேலம், நாமக்கல், தருமபுரி, கிருஷ்ணகிரி மாவட்டங்களிலேயே சுவையான தரமான வெல்லம் உற்பத்தி செய்யப்படுகிறது. இங்குள்ள காமலாபுரத்தில் மட்டும் சுமார் 200 கரும்பாலைகள் உள்ளன. கரும்பு பயிரிடும் விவசாயிகளில் பலரும் சொந்தமாகவே ஆலைகள் வைத்து வெல்லம் தயாரித்து சேலம் லீபஜார் மார்க்கெட்டுக்கு அனுப்புகின்றனர்.

அவர்களிடம் இருந்து வெல்லத்தை ஒரு சிப்பம் (31 கிலோ) ஆயிரம் ரூபாய்க்கு வியாபாரிகள் கொள்முதல் செய்கின்றனர். பொங்கல் பண்டிகை நெருங்குவதையடுத்து இதன் விலை இப்போது ரூ.1,135 ஆக உயர்ந்துள்ளது. நாளொன்றுக்கு சுமார் 300 டன் வரை இங்கு வெல்லம் உற்பத்தி செய்யப்படுகிறது.

பொங்கல் பண்டிகை நெருங்கி வரும் நிலையில் கரும்பு அறுவடை செய்யும் பணி தீவிரமாக நடைபெற்று வருகிறது. இதனால் அதிக அளவில் இப்போது வெல்லம் உற்பத்தி செய்யப்பட்டு வருகிறது. ஆனால் இந்த ஆண்டு தமிழக அரசு பொங்கல் பரிசு பொருள்கள் வழங்குவது குறித்து அறிவிப்பு எதுவும் வெளியிடப்படவில்லை.
அறிவிப்பு வரும், அதனால் உற்பத்தி பொருளுக்கு கூடுதல் விலை கிடைக்கும் என்று நம்பியிருந்த கரும்பி விவசாயிகள் நம்பிக்கையை இழந்து வருகின்றனர். பொங்கல் பண்டிகையின்போது விலை இன்னும் சற்று கூடும் என்றபோதிலும், அரசே எங்களிடம் இருந்து ஒட்டு மொத்தமாக பண்டிகைக்காக கொள்முதல் செய்தால் அதிக விலை கிடைக்கும். விலைவாசி உயர்ந்துள்ள நிலையில் உற்பத்திச் செலவுகளும் அதிகரித்துள்ளன. ÷எனவே இந்த ஆண்டும் பொங்கலுக்கு ரேஷன் கடைகள் மூலம் வெல்லம் வழங்க அரசு உத்தரவிட வேண்டும். இல்லாவிட்டால் உற்பத்தியான வெல்லம் பாதிக்கப்படுவதுடன் போதுமான விலை இல்லாமலும் விவசாயிகளும் நஷ்டப்பட நேரிடும் என்கிறார் காமலாபுரம் கரும்பு விவசாயி சி.பழனிக்கவுண்டர்.

÷கரும்பு, வெல்லம் உற்பத்தியில் ஈடுபட்டுள்ளவர்களுக்கு இந்த பொங்கல் பண்டிகை இனிக்குமா என்பதை பொருத்திருந்துதான் பார்க்க வேண்டும்.

தினமலர்

## முட்டைக் கோழி விலை திடீர் சரிவு : முட்டை விலை 255 காசாக நிர்ணயம்

ஜனவரி 08,2010,05:04



நாமக்கல்: தமிழகம், கேரளாவில் முட்டை விலை 255 காசாக நிர்ணயிக்கப்பட்டுள்ளது. முட்டை விலை தொடர் ஏற்றம் கண்டு வருவது பண்ணையாளர்கள் மத்தியில் மகிழ்ச்சி அலை வீசச்செய்துள்ளது.

நாமக்கல்லில் தேசிய முட்டை விலை நிர்ணயக்குழு கூட்டம் நடந்தது. முட்டை உற்பத்தி, ஏற்றுமதி குறித்து பண்ணையாளர்கள் விவாதித்தனர். அதையடுத்து 253 காசுக்கு விற்பனை செய்து வந்த முட்டை 2 காசு உயர்த்தி 255 காசாக நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. சென்ற டிசம்பர் மாதம் 19ம் தேதி 220 காசாக இருந்த முட்டை விலை கடந்த இரு வாரங்களில் 35 காசு ஏற்றம் கண்டிருப்பது கோழிப் பண்ணையாளர் மத்தியில் மகிழ்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

நாட்டின் பிற மண்டலங்களில் முட்டை விலை விவரம்: ஹைதராபாத் 243 காசு, விஜயவாடா, தனுகு 246 காசு, நெல்லூர், சித்தூர் 248 காசு, சென்னை 255 காசு, மைசூர் 245 காசு, பெங்களூரு 245 காசு, மும்பை 266 காசு, டில்லி 266 காசு, கோல்கத்தா 280 காசு. நாமக்கல்லில் நேற்று நடந்த பண்ணையாளர், வியாபாரி ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் முட்டைக்கோழி விலை 9 ரூபாய் குறைத்து 25 ரூபாயாக நிர்ணயிக்கப்பட்டது. பல்லடத்தில் நடந்த கறிக்கோழி உற்பத்தியாளர் ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் அதன் விலை 60 ரூபாய் என நிர்ணயிக்கப்பட்டது.

## காய்கறி விலை குறைகிறது : பருப்பு விலை மாற்றமில்லை

ஜனவரி 08,2010,05:04



புதுடில்லி: நாட்டின் உணவுப் பொருட்கள் பணவீக்கம் 18.22 சதவீதமாக குறைந்துள்ளது. காய்கறி,பழங்கள் விலை சிறிது குறைந்ததால், ஏற்பட்ட மாற்றம் இது. கடந்த மாதம் 26ம் தேதியுடன் முடிவடைந்த வாரத்தில், உணவுப் பொருட்கள் பணவீக்கம், 1.61 சதவீதம் குறைந்து, 18.22 சதவீதமாக உள்ளது. அதற்கு முந்தைய வாரம், உணவுப் பொருட்கள் பணவீக்கம், 19.83 சதவீதமாக இருந்தது. வார அடிப்படையில், பொருட்களின் விலை சிறிது குறைந்ததே, உணவுப் பொருட்கள் பணவீக்கம் குறைந்ததற்கான காரணம்.

எனினும், உணவுப் பொருட்கள் விலை அடுத்த மாதம் முதல் குறையத் துவங்கலாம் என்று கூறப்படுகிறது.

முன்னதாக திட்டக்கமிஷன் துணைத் தலைவர் மாண்டேக் சிங் அலுவாலியா கூறுகையில், 'வறட்சியால் ஏற்படும் பாதிப்புகள் தொடர்பான அச்சம், குறையத் துவங்கி உள்ளது. இதனால், உணவுப் பொருட்களின் விலை, அடுத்த மாதம் முதல் குறையத் துவங்கலாம்'என்றார். கடந்தாண்டு உருளைக்கிழங்கின் விலை 110 சதவீதமும், பருப்புகளின் விலை 42.21 சதவீதம் அதிகரித்தது. காய்கறிகளின் விலை ஒட்டுமொத்தமாக 30 சதவீதம் அதிகரித்தது. இதுகுறித்து கிரிசில் முதன்மை பொருளாதார நிபுணர் டி.கே.ஜோஷி கூறுகையில், 'காய்கறிகள் மற்றும் பழங்களின் விலை குறைந்துள்ளது. ஆனால் கோதுமை, பருப்புகள் மற்றும் அரிசியின் விலை குறையவில்லை' என்றார்.

# நதிகளை இணைத்தால் வெள்ளப் பெருக்கை தவிர்க்கலாம்: அப்துல் கலாம் யோசனை

ஜனவரி 07,2010,00:00 IST




சென்னை : ""மாநிலங்களில் உள்ள நதிகளை இணைத் தால், வெள்ளப் பெருக்கை தவிர்க்கலாம்,'' என முன்னாள் ஜனாதிபதி அப்துல் கலாம் பேசினார்.

தி.நகர், ஹோலி ஏஞ்சல்ஸ் மேல் நிலைப் பள்ளியின் பவள விழா நிகழ்ச்சியில் பங்கேற்ற அப்துல் கலாம் பேசியதாவது: மாணவர்கள் அவர்கள் வீடுகளில் கட்டாயம் நூலகத்தை அமைக்க வேண்டும். தினமும் ஒரு மணி நேரமாவது நூலகத்தில் உள்ள புத்தகங்களை படிப்பது என, மாணவர்கள் உறுதி எடுத்துக் கொள்ள வேண்டும். ஆசிரியர்களும், பெற்றோர்களும் இதை ஊக்குவிக்க வேண்டும். லட்சியம் இல்லாமல் வாழ்வதை, மாணவர்கள் பெரும் குற்றமாக கருத வேண்டும். பொருளாதாரம் மற்றும் அறிவியலில் நாட்டில் அதிக வளர்ச்சி ஏற்பட்டுள்ளன. மேலும், மாநிலங்களில் உள்ள நதிகளை இணைத்தால் வெள்ளப் பெருக்கை தவிர்க்கலாம். இவ்வாறு அப்துல் கலாம் பேசினார்.

நிகழ்ச்சியில் மாணவர்களின் கேள்விகளுக்கு அப்துல் கலாம் அளித்த பதில்:

*** நிலவில் நீர் இருந்தால் மனிதனால் அங்கு வசிக்க முடியுமா?**

பூமியில் தற்போது 600 கோடி மக்கள் வாழ் கின்றனர். எதிர் காலத்தில் இது 900 கோடியாக உயரும். மக்கள் தொகையின் அதிகரிப்பால், நிலவில் நீர் இருந்தாலும் அங்கு மனிதர்கள் வாழ முடியாது. அந்த நீரை விஞ்ஞான ரீதியாகவும், தொழில் நுட்ப நீதியாகவும் உபயோகப்படுத்தலாம்.

*** இந்தியாவில் பொருளாதார வளர்ச்சி எப்படி உள்ளது?**

வெளிநாடுகளில் பல நிறுவனங்கள் பொருளாதார மந்த நிலையால் பெரும் வீழ்ச்சி அடைந்தன. இந்தியாவில் எந்த பாதிப்பும் ஏற்படவில்லை. இன்னும் பத்தாண்டுகளில் தொழில் நுட்ப ரீதியாகவும், பொருளாதார ரீதியாகவும், பல முன்னேற் றங்கள் ஏற்படும். தகவல் தொழில் நுட்ப வளர்ச்சியில், இந்தியா அபரிமிதமான வளர்ச்சி அடையும்.

*** பூமி வெப்ப மயமாதலை தடுக்க என்ன செய்ய வேண்டும்?**

ஆளுக்கொரு மரம் வளர்க்க வேண்டும். கார்பன் - டை ஆக்சைடு அதிகரிப்பால், பூமி வெப்பமாகிக் கொண்டிருக்கிறது. மரம் வளர்ப்பதன் மூலம், கார்பன் - டை ஆக்சைடு உட்பட பல வாயுக்களை கட்டுப்படுத்தலாம். எனவே, ஒவ்வொரு மாணவரும் பத்து மரங்களை நட வேண்டும் என, உறுதி எடுத்துக் கொள்ள வேண்டும்.

**கோவை மலர் கண்காட்சி நாளை துவக்கம்**

கோவை : ரோட்டரி கோவை அப்டவுன், தமிழ்நாடு வேளாண் பல்கலை தோட்டக்கலை துறை சார்பில், பொட்டானிக்கல் கார்டனில் கோவை மலர் கண்காட்சி நாளை துவங்குகிறது; நாளை மறுநாள் நிறைவடைகிறது.

ரோட்டரி கோவை அப்டவுன் தலைவர் சிவா கூறியதாவது: தமிழ்நாடு வேளாண் பல்கலை தோட்டக்கலைத்துறையுடன் இணைந்து, மருதமலை ரோட்டில் உள்ள பொட்டானிக்கல் கார்டனில் இரண்டு நாள் மலர் கண்காட்சி நடத்தப்படுகிறது.

இதில், ஹாலந்து, தாய்லாந்து, தென்ஆப்பிரிக்கா, சிங்கப்பூர் உள்ளிட்ட நாடுகளில் இருந்து மலர்கள் இறக்குமதி செய்யப்பட்ட மலர்கள் டச்சு அலங்காரக்கூடமாக அமைக்கப்படுகிறது. இந்தியாவில் பயிராகும் லில்லி, அல்பினியா, எலிகோனியா, கார்னேசன், ரோஜா, அந்தூரியம் அடங்கிய உதிரிமலர்கள் கூடமும் அமைக்கப்படுகிறது. மலர் கோலம், உலர் கோலம், அழகு இலை அலங்காரங்கள் செய்யப்படும். மேலும், போன்சாய் கூடம், மணமக்கள் மேடை, காய்கறி சிற்பங்களும் இடம்பெறுகின்றன.

இத்துடன், மலர் கண்காட்சியை கொண்டாடும் வகையில், பல்வேறு போட்டிகள், கலை நிகழ்ச்சிகள் நடத்தபடுகிறது. கண்காட்சி வளாகத்தில் வங்கிகள், உணவு கூடங்கள் உள்ளிட்ட 70 அரங்குகள் அமைக்கப்படுகின்றன. கண்காட்சிக்கு வரும் பொதுமக்களின் வசதிக்காக காந்திபுரம், சிங்காநல்லூர், ரயில்வே ஸ்டேசன், உக்கடம் பஸ் ஸ்டாண்டுகளில் இருந்து இப்பகுதிக்கு கூடுதல் பஸ்கள் இயக்கப்படுகின்றன. நாளை காலை 9.00 மணிக்கு துவங்கும் இக்கண்காட்சியை வேளாண் துறை அமைச்சர் வீரபாண்டி ஆறுமுகம் துவக்கி வைக்கிறார். இவ்வாறு, சிவா தெரிவித்தார்.

**தோட்டக்கலை பயிர் விவசாயிகள் காப்பீட்டு திட்டத்தில் சேர யோசனை**

ஒட்டன்சத்திரம் : தோட்டக்கலைப் பயிர்களை பயிரிட்டுள்ள விவசாயிகள் அரசு மானியத்துடன் கூடிய பருவநிலை பயிர் காப்பீட்டுத் திட்டத்தில் சேர்ந்து பயன் பெறுமாறு ஒட்டன்சத்திரம் தோட்டக் கலை உதவி இயக்குநர் சின்னராஜ் கேட்டுக் கொண்டுள்ளார்.

ஒட்டன்சத்திரம் தாலுகாவில் முதன் முறையாக விவசாயிகளின் நலன் கருதி அரசு மானியத்துடன் கூடிய பருவநிலை பயிர் காப்பீட்டுத் திட்டம் மா, வெங்காயம் மற்றும் விஷ வெள்ளரி உள்ளிட்ட தோட்டக்கலை பயிர்களுக்கு அறிமுகப்படுத்தப்பட்டு உள்ளது. இத்திட்டத்தின் கீழ் அதிக மழை மற்றும் கடுமையான நோய் தாக்குதலுக்கு ஏதுவான வானிலை போன்றவற்றிற்கு காப்பீடு செய்து கொள்ளலாம்.
மா மற்றும் விஷ வெள்ளரி பயிர்களுக்கு காப்பீட்டு காலம் 01.01.2010 முதல் 30.04.2010 வரையும், வெங்காயப் பயிர்களுக்கு 01.02.2010 முதல் 31.03.2010 முடிய உள்ள காலத்திற்கு காப்பீடு செய்யலாம். விஷ வெள்ளரி பயிர்க்கு ஒரு ஏக்கருக்கு அரசு மான்யம் 1586 ரூபாய்,விவசாயி பங்குத்தொகை 1655 ரூபாய் ஆகும். மாமரம் ஒன்றிற்கு அரசு மான்யம் 32 ரூபாய், விவசாயி பங்குத்தொகை 34 ரூபாய்,வெங்காயப் பயிர்களுக்கு ஒரு ஏக்கருக்கு அரசு மான்யம் 761 ரூபாய்,விவசாயி பங்குத்தொகை 794 ரூபாய் செலுத்த வேண்டும்.

இத்திட்டத்தில் பருவநிலை அடிப்படையில் காப்புறுதி பாதுகாப்பு, இடுபொருள் தொகையை காப்பீட்டு தொகையாக எடுத்துக் கொள்ளப் படுகிறது. குத்தகை மற்றும் சொந்த நிலம் உள்ள விவசாயிகள் தங்களுடைய சாகுபடி நிலத்தின் சர்வே எண், பெயர், முகவரி மட்டும் தெரிவித்து தொகை செலுத்தியவுடன் பாலிசி வழங்கப்படும். விசவாயிகள் இத்திட்டத்தில் சேர்ந்து பயன்பெறுமாறு ஒட்டன்சத்திரம் தோட்டக் கலை உதவி இயக்குநர் சின்னராஜ் கேட்டுக் கொண்டுள்ளார்.

**நோய் தாக்குதல் இல்லாத ஆரஞ்சு நாற்று வழங்க ஏற்பாடு**

தாண்டிக்குடி : தாண்டிக்குடி மலைப்பகுதியில் ஒட்டு வகை ஆரஞ்சில் நோய் தாக்குதல் இல்லாத ரகங்களை விவசாயிகளுக்கு வழங்க தடியன்குடிசை தோட்டக் கலை ஆராய்ச்சி நிலையத்தில் நாற்றுக்கள் பராமரிக்கப்பட்டு வருகின்றன.

நாக்பூர் எலுமிச்சை ஆராய்ச்சி நிலையத்திலிருந்து கொண்டு வரப்பட்ட தாய்க்கன்று ரகங்கள் தடியன்குடிசை ஆராய்ச்சி மையத்தில் பசுமைக்குடிலில் பராமரிக்கப்பட்டு வருகிறது. நாக்பூர் -மேன்ட்ரின், நாக்பூர்-சந்திரா, கூர்க் மேன்ட்ரின், கமலா உள்ளிட்ட வகைகள் அடங்கும்.இதில் பூஞ்சாணம், பாக்டீரியா, நச்சு உயிரி உள்ளிட்ட நோய்களின் தாக்குதல் அறவே நீக்கப்பட்ட நிலையில் தாய்க்கன்று பராமரிக்கப்பட்டுள்ளது.
தடியன்குடிசை தோட் டக்கலை ஆராய்ச்சி மைய தலைவர் ஆனந்தன் கூறியதாவது: மகாராஷ்டிராவிலிருந்து கொண்டு வரப்பட்ட தாய்க்கன்றுகள் தற்போது நடவு செய்யப்பட்டுள்ளது. இதிலிருந்து கிடைக்கும் குச்சிகள் மூலம் நாற்றுக் கள் இனவிருத்தி செய்யப் பட்டு வரும் ஜூன், ஜூலை முதல் இப் பணிகள் தீவிரமடைந்து நடப் பாண்டின் இறுதியில் கீழ்மலை பகுதி விவசாயிகளுக்கு சுமார் 20 ஆயிரம் நாற்றுக்கள் உற்பத்தி செய்ய திட்டம் வகுக்கப் பட்டுள்ளது. இதன் மூலம் ஆரஞ்சு நோய் பாதிப்பிலிருந்து விவசாயிகளுக்கு விடுபட வழி ஏற்படும் என்றார்.

**நன்னீர் இறால் வளர்க்க உத்தரவு**

திண்டுக்கல் : திண்டுக்கல் மாவட்டத் தில் உள்ள குளங்களில் நன்னீர்இறால் வளர்க்க நடவடிக்கை எடுக்க வேண் டும் என மீன்வளத்துறைக்கு கலெக்டர் வள்ளலார் உத்தரவிட்டுள்ளார்.

திண்டுக்கல் மாவட்டத் தில் 36 குளங்களில் மீன் வளத்துறை மூலம் நேரடியாக மீன் வளர்க்கப்பட்டு விற்பனை செய்யப்படுகிறது. 20 குளங்களில் மீன் வளர்ப்பு மேம்பாட்டு முகமை மூலம் மீன் வளர்க்கப்படுகிறது. பெரும்பாலும் கட்லா, ரோகு, மிருகால், சாதாகெண்டை போன்ற மீன் களே வளர்க்கப்படுகின் றன. தற்போது பெய்துள்ள மழையால் பழநி பகுதியில் உள்ள 20க்கும் மேற் பட்ட கண்மாய்கள் நிரம்பி உள்ளன. இவற்றில் நன்னீர் இறால் வளர்க்க வேண்டும் என கலெக்டர் மீன்வளத்துறைக்கு உத்தரவிட்டுள்ளார்.

**தேங்காய் பருப்பு உற்பத்தி கடும் குளிரால் பாதிப்பு**

கோபிசெட்டிபாளையம்: கோபி மற்றும் சுற்று வட்டாரப் பகுதிகளில் தொடர்ந்து நிலவி வரும் கடும் குளிர் காரணமாக தேங்காய் பருப்பை காய வைக்க முடியாமல் விவசாயிகள் திணறி வருகின்றனர். கோபி ஒழுங்குமுறை கூடத்துக்கு குறைந்தளவே தேங்காய் பருப்பு ஏலத்துக்கு வந்தது. கோபி ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்தில் வாரந்தோறும் தேங்காய் பருப்பு ஏலம் நடந்து வருகிறது. இரண்டு மாதங்களுக்கு தேங்காய் பருப்புக்கு குறைந்த விலையே விவசாயிகளுக்கு கிடைத்தது. டிசம்பர் மாதம் தேங்காய் பருப்புக்கு கிலோ 30 ரூபாய் வரை கிடைத்தது. ஆனால், தொடர்ந்து பெய்த மழையால் தேங்காய் பருப்பு உற்பத்தி செய்ய முடியவில்லை. தற்போது கோபி மற்றும் சுற்று வட்டார பகுதிகளில் கடுமையான குளிர் வீசி வருகிறது. இதனால், தேங்காய் பருப்பை முழுமையாக காய வைக்க முடியவில்லை.

சென்ற வாரம் கோபி ஒழுங்கு விற்பனைக் கூடத்துக்கு 346 மூட்டை தேங்காய் பருப்பு ஏலத்துக்கு வந்தது. கடுமையான குளிர் காரணமாக நடப்பு வாரம் 300 மூட்டையாக வரத்து குறைந்தது. குறைந்தளவே தேங்காய் பருப்பு மூட்டை ஏலத்துக்கு வந்ததால், அதிக விலை கிடைக்கும் என விவசாயிகள் எதிர்பார்த்தனர். ஆனால், கடந்த வாரத்தை விட தேங்காய் பருப்பு கிலோவுக்கு 49 பைசா குறைவாகத்தான் ஏலம் போனது. நடப்பு வாரம் அதிகபட்சமாக 32.77 ரூபாய், குறைந்தப்பட்சமாக 31.31 ரூபாய், சராசரியாக 32.41 ரூபாய்க்கு ஏலம் போனது. மூன்று லட்சத்து 80 ஆயிரம் ரூபாய் மதிப்பில் நடப்பு வாரம் தேங்காய் பருப்பு வர்த்தகம் நடந்தது.

**முட்டைக் கோழி விலை திடீர் சரிவு : தமிழகம், கேரளாவில் முட்டை விலை 255 காசாக நிர்ணயம்**

நாமக்கல்: தமிழகம், கேரளாவில் முட்டை விலை 255 காசாக நிர்ணயிக்கப்பட்டுள்ளது. முட்டை விலை தொடர் ஏற்றம் கண்டு வருவது பண்ணையாளர்கள் மத்தியில் மகிழ்ச்சி அலை வீசச்செய்துள்ளது. நாமக்கல்லில் தேசிய முட்டை விலை நிர்ணயக்குழு கூட்டம் நடந்தது. முட்டை உற்பத்தி, ஏற்றுமதி குறித்து பண்ணையாளர்கள் விவாதித்தனர். அதையடுத்து 253 காசுக்கு விற்பனை செய்து வந்த முட்டை 2 காசு உயர்த்தி 255 காசாக நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. சென்ற டிசம்பர் மாதம் 19ம் தேதி 220 காசாக இருந்த முட்டை விலை கடந்த இரு வாரங்களில் 35 காசு ஏற்றம் கண்டிருப்பது கோழிப் பண்ணையாளர் மத்தியில் மகிழ்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

நாட்டின் பிற மண்டலங்களில் முட்டை விலை விவரம்: ஹைதராபாத் 243 காசு, விஜயவாடா, தனுகு 246 காசு, நெல்லூர், சித்தூர் 248 காசு, சென்னை 255 காசு, மைசூர் 245 காசு, பெங்களூரு 245 காசு, மும்பை 266 காசு, டில்லி 266 காசு, கோல்கத்தா 280 காசு. நாமக்கல்லில் நேற்று நடந்த பண்ணையாளர், வியாபாரி ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் முட்டைக்கோழி விலை 9 ரூபாய் குறைத்து 25 ரூபாயாக நிர்ணயிக்கப்பட்டது. பல்லடத்தில் நடந்த கறிக்கோழி உற்பத்தியாளர் ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் அதன் விலை 60 ரூபாய் என நிர்ணயிக்கப்பட்டது.

**வேளாண் உற்பத்தியில் புரட்சிகளை உருவாக்கலாம்: டீன் நம்பிக்கை**

ஊட்டி : "" இயற்கை வேளாண் குறித்த தகவல்கள் பல புதிய கண்டுபிடிப்புகளையும், எதிர்கால உணவு உற்பத்திக்கான வழிமுறைகளையும் கொடுக்கும்," என தெரிவிக்கப்பட்டுள்ளது. சர்வதேச வேளாண் மற்றும் ஊரக வளர்ச்சி கல்வித் திட்டத்தின் கீழ், அமெரிக்கா, நியூயார்க்கில் உள்ள "கார்னல்' பல்கலைக் கழகத்தில் படிக்கும் 34 மாணவ, மாணவியர் ஊட்டிக்கு வந்தனர். இவர்கள் தமிழ்நாடு வேளாண் பலக்கலையில் படிக்கும் மாணவியருடன் முதுகலை பட்டப் படிப்புக்கான பல தரப்பட்ட ஆய்வுகளில் கடந்த எட்டு ஆண்டுகளாக ஈடுபட்டு வருகின்றனர்.

இதற்கென இரு பல்கலைக் கழகங்களின் சார்பில் புரிந்துணர்வு ஒப்பந்தம் கையெழுத்தாகி உள்ளது. இந்த ஆண்டு 34 மாணவ, மாணவியர் கோவைக்கு வந்து பல்வேறு ஆய்வு பாடங்கள் குறித்து அறிய, நேற்று ஊட்டிக்கு வந்தனர். ஊட்டி தொட்பெட்டா அருகில் உள்ள இயற்கை வேளாண் பண்ணைக்கு வேளாண் விஞ்ஞானி செல்வராஜ்,

அவர்களை அழைத்து சென்றார். அந்த பண்ணையில் இயற்கை விவசாய மூலம் உருவாக்கப்பட்ட ரோஸ்மேரி உட்பட பல்வேறு மூலிகை செடிகளின் தன்மை, பயன்கள், அவற்றால் உருவாக்கப்படும் மருந்துகள் குறித்தும் அவர்களுக்கு நேரடி காட்சிகள் மூலம் விளக்கப்பட்டது. இதை தவிர, ரசாயன உரங்கள் இல்லாமல், மாட்டு சாணத்தை மட்டுமே கொண்டு உருவாக்கப்பட்ட "பஞ்சகாவியம், தசகாவியம்' போன்ற கலவைகளின் பயன்கள், அதனால் உருவாக்கப்படும் மலர்ச் செடிகள் மற்றும் விளை பொருட்களின் தரம் குறித்தும் ஆதாரத்துடன் விளக்கப்பட்டது.  மண்புழு மக்கு உரம், வீணாகிப் போகும் குப்பைகளை கொண்டு உருவாக்கப்பட்ட உரங்களை உற்பத்தி செய்யும் முறை குறித்தும் தெரிவிக்கப்பட்டது.

"இந்த அனுபவம் தங்கள் நாட்டின் இயற்கை வேளாண் முறைகளுக்கு முற்றிலும் வேறுபட்டு காணப்படுவதாகவும், இதில், மாட்டு சாணம் உட்பட பால், தயிர், நெய் ஆகியவற்றால் உருவாக்கப்படும் "பஞ்சகாவியம்' கலவை பெரும் ஆச்சரியத்தை ஏற்படுத்துவதாகவும்,' பல மாணவிகள் கருத்து தெரிவித்தனர்.

இது குறித்து நியூயார்க்"கார்னல்' பல்கலைக் கழக இயக்குனர் ரோணிகால்மென் கூறுகையில்,"" தமிழக இயற்கை வேளாண் முறையும், எங்கள் நாட்டின் வேளாண் முறைகளில் பல்வேறு வித்தியாசங்கள் இருப்பினும், மாணவ, மாணவியருக்கான இந்த வேளாண் பரிமாற்ற முறைகளும், இயற்கை வேளாண் குறித்த தகவல்களும் பெரும் பயனுடையதாக இருக்கும். இதனால், பல்வேறு புதிய கண்டுபிடிப்புகளும், எதிர்கால உணவு உற்பத்திக்கான வழிமுறைகளும் மாணவர்களுக்கு கிடைக்கும். கடந்த எட்டு ஆண்டுகளாக நடக்கும் இந்த பரிமாற்றம் மேலும்  தாடர நடவடிக்கை எடுக்கப்படும்," என்றார்.

நியூயார்க்"கார்னல்' பல்கலைக் கழக உதவி இயக்குனர் ராமன் கூறுகையில்,"" தமிழ்நாடு வேளாண் பல்கலை முதுகலை மாணவர்களும், அமெரிக்காவில் படிக்கும் மாணவர்களும் ஒருங்கிணைந்து படிக்கும் போதும், இதுபோன்ற கள ஆய்வுகளில் ஈடுபடும் போதும் பல்வேறு புதிய வேளாண் யுக்திகள் குறித்து அறிய முடியும்," என்றார். தமிழ்நாடு வேளாண் பல்கலைக்கழக "டீன்' உதய சூரியன் கூறுகையில்,"" எங்கள் பல்கலை கழகத்தின் மாணவ, மாணவியருக்கு செல்வராஜின் இயற்கை வேளாண் முறை குறித்த ஆய்வுகள் பெரும் பயனிப்பதாக உள்ளது. இந்த முறைகளை எங்களின் ஒப்பந்தத்தின் அடிப்படையில் அமெரிக்க மாணவ, மாணவியரும் அறியும் வகையில் கடந்த சில ஆண்டுகளாக நடவடிக்கை எடுத்து வருகிறோம். இதனால், வேளாண் உற்பத்தியில் பல புரட்சிகளை ஏற்படுத்த முடியும், என்றார். வரும் 11ம் தேதி வரை ஊட்டியில் தங்க உள்ள அமெரிக்க மாணவ, மாணவியர் பல்வேறு வேளாண் ஆய்வுகள் குறித்து அறிந்து, அதற்கான அறிக்கையை அமெரிக்க கார்னல் பலக்கலை கழகத்தின் சமர்பிக்க உள்ளனர்.

**வேளாண் இலவச பயிற்சி**

பரமக்குடி :  வேளாண்மை பொறியியல் துறை மூலம் பவர் டில்லர் இயந்திரத்தை இயக்குதல், பராமரித்தல் மற்றும் நிர்வகித்தல் குறித்த இலவச பயிற்சி விவசாயிகள், இளைஞர்களுக்கு அளிக்கப்பட உள்ளது. பரமக்குடி வேளாண் உதவி செயற்பொறியாளர் அலுவலகத்தில், ஜன.,18 முதல் 14 நாட்களுக்கு நடைப்பெறும். 18 முதல் 40 வயதுடையவர்கள், உதவிசெயற்பொறியாளர் அலுவலகம்(வேளாண்மை பொறியியல் துறை), 493/2/352,காந்திஜி தெரு, தாலுகா அலுவலகம் எதிரில், பரமக்குடி என்ற முகவரியில் விண்ணப்பிக்கலாம்.

**மானிய விலையில் பூச்சி கொல்லி மருந்து**

முதுகுளத்தூர் :  முதுகுளத்தூர் வட்டார வேளாண்மை விரிவாக்க மையத்தில் தேசிய உணவு பாதுகாப்பு இயக்கத்தின் கீழ் குளோரிபைரியாஸ், டிரைசைக்ளோசோட், கார்பக்ட்சில் மருந்துகள் 50 சதவீத மானியத்தில் வினியோகம் செய்யப்படுகிறது. இதை விவசாயிகள் பயன்படுத்தி பலன்பெற, முதுகுளத்தூர் வட்டார வேளாண்மை உதவி இயக்குனர் பாஸ்கரன் கேட்டுகொண்டுள்ளார்.

**மார்க்கெட்டை ஆக்ரமித்தது காலி ஃபிளவர் : விலைச்சரிவில் பட்டாணி**

சேலம்: சேலம் மார்க்கெட்டில் காலி ஃபிளவர் வரத்து அதிகரித்துள்ளது. அதேநேரத்தில், பச்சை பட்டாணி விலை கடும் சரிவை சந்தித்துள்ளது.

காய்கறிகளின் கடுமையான விலையேற்றத்தை மட்டுமே நாள்தோறும் சேலம் மார்க்கெட் சந்தித்து வந்தது. சில நாட்களாக அனைத்து வகையான காய்கறிகளும் ஒரு நிலையான விலையில் நிலை கொண்டிருக்கிறது. குறிப்பாக, குடும்பத்தில் பெரியவர் முதல் சிறியவர்கள் வரை விரும்பி உண்ணக்கூடிய காலி ஃபிளவர்கள் சேலத்தில் குவிய துவங்கியுள்ளன. குழந்தைகள் மிகவும் விரும்புகின்ற பச்சை பட்டாணி விலை கடும் சரிவடைந்துள்ளது.
இது குறித்து சேலம் ஆனந்தா இறக்கம் காய்கறி கடைக்காரர் பழனிச்சாமி கூறியதாவது: ஜனவரி, ஃபிப்ரவரியில் காலி ஃபிளவர் சீசன் துவங்கிவிடும். கர்நாடகா மாநிலம் கோலார், பெங்களூரு மற்றும் ஓசூர் ஆகிய பகுதிகளில் காலி ஃபிளவர் அதிகமாக விளைவிக்கப்படுகிறது. கர்நாடகாவில் இருந்து சேலத்திற்கு கொண்டு வரும் லாரி வாடகை, ஏற்றுக்கூலி, இறக்குக்கூலி சேர்த்தால் ஒரு பூவுக்கு 5 ரூபாய் வரை செலவு பிடிக்கிறது. தற்போது வரத்து அதிகமாக இருப்பதால் விலை அதிகரிக்கவில்லை. கடந்தாண்டு விளைச்சல் பாதிக்கப்பட்டிருந்ததால், ஒரு பூ 60 ரூபாய் வரையிலும் விற்றது. வரத்து குறைந்தால் மட்டுமே விலை அதிகரிக்க வாய்ப்புள்ளது. ஒரு பூ ஐந்து ரூபாயில் இருந்து 15 ரூபாய் வரை விற்கப்படுகிறது. அரை கிலோ வரை எடையுள்ள நல்ல காலி ஃபிளவர் பூ ஐந்து ரூபாயும், சுமார் ஒன்றரை கிலோ எடையுள்ள நல்ல பூ 12ல் இருந்து 15 ரூபாய் வரையிலும் கிடைக்கிறது.

**பட்டாணி சர்...ர்...ர்:** : பெங்களூரு, ஊட்டி, ஓசூர் ஆகிய பகுதிகளில் பச்சை பட்டாணி அதிகளவு விளைவிக்கப்படுகிறது. விளைச்சல் அதிகரிப்பு காரணமாக, வரத்தும் அதிகரித்துள்ளது. விலையும் மூன்றில் ஒரு மடங்காக சரிந்து விட்டது. சில நாட்களுக்கு முன் ஒரு கிலோ பட்டாணிக்காய் 100 ரூபாய்க்கு விற்றது. தற்போது, 25 ரூபாயில் இருந்து 30 ரூபாய் வரை விற்கப்படுகிறது. ஒரு கிலோ  பட்டாணிக்காயை தோல் உரித்தால், 600 கிராம் பட்டாணி கிடைக்கும். இவ்வாறு அவர் கூறினார்.

**"சறுக்கிய' விலையேற்றம்!** : கடந்த வாரத்தைவிட இந்த வாரம் அனைத்து காய்கறிகளின் விலையும் சற்று குறைத்துள்ளது. நேற்றைய காய்கறி மார்க்கெட் விலை விபரம் (ஒரு கிலோவிற்கு): கத்திரிக்காய் 18 ரூபாய், உருளைக்கிழங்கு (பெங்களூரு) 22, உருளைக்கிழங்கு (ஊட்டி) 25, பீன்ஸ் 20, கேரட் 22, நாட்டு தக்காளி 16, பெங்களூரு தக்காளி 18, வெங்காயம் (சிறியது) 26, வெங்காயம் (பெரியது) 28, பீட்ருட் 18, நூக்கல்ஸ் 16, முள்ளங்கி 14, அவரைக்காய் 26, சேனைக்கிழங்கு 20, கருணைக்கிழங்கு 24, சேப்பங்கிழங்கு 25, சுரைக்காய் 10, பரங்கிக்காய் 10 ரூபாய்க்கும் விற்கப்பட்டது.

**பொங்கலையொட்டி விற்பனைக்கு தயாரான மஞ்சள் கிழங்கு செடிகள்**

சிவகங்கை : பொங்கலை முன்னிட்டு சிவகங்கையில் அறுவடைக்கு தயார் நிலையில் மஞ்சள் கிழங்கு செடிகள் விளைந்துள்ளன.

சிவகங்கை ஒன்றியம் சாலூர், கூட்டுறவுபட்டி, கீழ மற்றும் மேலப்பூங்குடியில் 50 ஏக்கரில் மஞ்சள் கிழங்கு செடிகள் நடவு செய்யப்பட்டுள்ளன. மே மாதத்தில் கிணற்று பாசனம் மூலம் விவசாயிகள் மஞ்சள் செடியை நட்டுவருவர். உழவுபணிக்கு பின் நிலத்தை நன்கு செப்பனிட்டு நாற்றாக நட்டு, தேவைக்கு ஏற்ப உரம் இட்டால் போதும்.  ஆறு மாதத்திற்கு பின் பொங்கல் பண்டிகை விற்பனைக்காக மஞ்சள் கிழங்கு செடிகள் அறுவடைக்கு தயாராக வந்துவிடும். இங்கு விளையும் மஞ்சளை வியாபாரிகள் வாங்கி சிவகங்கை, மேலூர், புதுக்கோட்டை, அறந்தாங்கியில் விற்பனைக்கு எடுத்து செல்வர்.
கூட்டுறவுபட்டி விவசாயி கண்ணன் கூறியதாவது: பத்து ஆண்டுகளாக மஞ்சள் கிழங்கு நடவு செய்கிறேன். ஒரு சென்ட் நிலத்திற்கு 300 ரூபாய் செலவாகும். இதை நன்கு பராமரித்தால் சென்டிற்கு 500 கிழங்கு செடிகள் வளரும். வியாபாரிகள் எங்களிடம் ஒரு கிழங்கு செடியை 2.50 முதல் 3 ரூபாய் கொடுத்து வாங்கி செல்கின்றனர். இதன் மூலம்

சென்டிற்கு 1,500 ரூபாய் வருவாய் கிடைக்கும், என்றார்.

விவசாயதுறை அதிகாரி ஒருவர் கூறியதாவது: ஈரோடு ஒப்பிடுகையில் இங்கு மஞ்சள் விளைச்சல் சற்று குறைவு தான். இருப்பினும் ஆர்வமுள்ள விவசாயிகள் கிணற்று பாசனம் மூலம் மஞ்சள் கிழங்கு செடியை நடவு செய்து குறைந்த செலவில் பராமரித்து ஓரளவுக்கு லாபம் பெறுகின்றனர், என்றார்.

**வாழையில் இருந்து நார் எடுக்கும் இயந்திரம் குறித்து செயல்விளக்கம்**

திருவையாறு : வாழையில் இருந்து நார் எடுக்கும் இயந்திரம் குறித்து வீடியோ கான்பரன்சிங் மூலம் செயல் விளக்கம் செய்து காட்டப்பட்டது.திருவையாறு எம்.எஸ்.சாமிநாதன் ஆராய்ச்சி நிறுவனத்தின் கிராம வள மையத்தில் வாழையில் இருந்து நார் எடுக்கும் இயந்திரம் பற்றிய செயல் விளக்க நிகழ்ச்சி நடந்தது.வாழை ஆராய்ச்சி நிலைய தலைவர் சுப்பிரமணியம், ஸ்ரீதர் ஆகியோர் வீடியோ கான்பரன்சிங் வாயிலாக பேசினர். அப்போது வாழையில் இருந்து நார் எடுக்கும் இயந்திரம் குறித்து விளக்கினர். இந்த இயந்திரத்தை தனியார் கம்பெனி தயாரித்துள்ளது. மிஷின் மெட்டீரியலை பொறுத்து இரு விதமாக உள்ளது. ஒன்றின் விலை ரூபாய் 48 ஆயிரம், மற்றொரு மிஷின் விலை ரூபாய் 51 ஆயிரமாகும். 8 மணி நேரம் மிஷின் ஓடுவதற்கு 3 லிட்டர் டீசல் தேவைப்படும்.

ஒரு கிலோ நார் விலை ரூபாய் 40 முதல் 60 வரை என்றும், ஒரு நாளைக்கு 30 முதல் 50 கிலோ வரை நார் எடுக்க முடியும் என்றார். ஒரு மிஷினில் வேலை பார்க்க 3 முதல் 4 பேர் தேவை. மகளிர் சுய உதவிக்குழுக்கள் வங்கியில் கடன் மூலம் இந்த மிஷினை பெறலாம். உற்பத்தி செய்த வாழை நாரினை தாங்களே எடுத்துக் கொள்வதாகவும் தெரிவித்தனர். நிகழ்ச்சியில் திருவையாறு சுற்றியுள்ள கிராமங்களில் இருந்து சுய உதவிக்குழுவினர், வாழை சாகுபடி செய்யும் விவசாயிகள், தேசிய இணைய கல்விக் கழக உறுப்பினர்கள் கலந்து கொண்டனர். பயிற்சி மற்றும் மிஷின் பற்றிய விபரங்களை தெரிந்து கொள்ள மீனாட்சி, 22 ஏ.நல்லப்பா தெரு, நேரு நகர், குரோம்பேட்டை, சென்னை- 600 044 என்ற முகவரிக்கு தபாலிலோ, நேரிலோ அல்லது தொலைபேசி எண்: 044 223176, 223181, செல்போன் 94440-15576 என்ற எண்ணிலோ தொடர்பு கொள்ளலாம் என தெரிவித்தனர்.

**விளைபொருள் உற்பத்தியாளர் குழு விவசாயிகளுக்கு அடையாள அட்டை வழங்குதல் கூட்டம்**

தூத்துக்குடி : ஸ்ரீவைகுண்டம் வட்டம், இசவன்குளத்தில் நெல் விளைபொருள் உற்பத்தியாளர் குழு விவசாயிகளுக்கு அடையாள அட்டை வழங்கும் கூட்டம் நடந்தது.கூட்டத்தில் தூத்துக்குடி வேளாண்மை துணை இயக்குனர் (வேளாண் வணிகம்) முருகானந்தம் தலைமை வகித்தார்.

வேளாண் வணிக வேளாண்மை அலுவலர் ராஜா, இசவன்குளம் நெல் குழு தலைவர் ராமர், சுப்பிரமணியன், பத்மநாபமங்கலம் நெல் குழு தலைவர் முத்துசாமி, உதவி வேளாண்மை அலுவலர்கள் மாடசாமி சொர்ணம், ராஜா மற்றும் ஏராளமான குழு விவசாயிகள் கலந்து கொண்டனர். தூத்துக்குடி வேளாண்மை துணை இயக்குனர் முருகானந்தம் பேசும் பொழுது, தூத்துக்குடி மாவட்டத்தில் இதுவரை 120 விளை பொருள் உற்பத்தியாளர் குழு அமைக்கப்பட்டு உள்ளது எனவும், குழுவில் உள்ள அனைத்து விவசாயிகளும் ஒத்த கருத்துடன் விளைவித்த நெல் மணிகளை அறுவடை சமயத்தில் உடனே விற்றால் நல்ல விலை கிடைக்காது என்பதால் அருகில் உள்ள ஸ்ரீவைகுண்டம் ஒழுங்குமுறை விற்பனை கூடத்தில் இருப்பு வைத்து ஈட்டுகடன் வசதி பெற்று காலம் தாழ்த்தி சந்தையில் நல்ல விலை கிடைக்கும் பொழுது விற்றால் அதிக லாபம் பெறலாம் என்றும், மேலும் குழு விவசாயிகள் பயனடையும் வகையில் ஒட்டு மொத்த விளை பொருள்களை வேளாண் வணிகதுறை அலுவலர் மூலம் கொள் முதலீட்டாளர்களிடம் புரிந்துணர்வு ஒப்பந்தம் செய்து 5 - 10 சதவீதம் கூடுதல் விலைக்கு விற்று பயன் அடையலாம் என்றும் கூறினார்.

தூத்துக்குடி மாவட்டத்தில் முதல்முறையாக விவசாய அடையாள அட்டையை இசவன்குளம் மற்றும் பத்பநாபமங்கலம் நெல் உற்பத்தியாளர் குழுவினர்களுக்கு வழங்கி, இந்த விவசாய அடையாள அட்டை, பொது இடங்களிலும், ஒழுங்குமுறை விற்பனை கூடங்களிலும் முன்னோடி குழு விவசாயி என்ற அந்தஸ்தை பெற ஏதுவாக இருக்கும். மேலும் பாங்க்களில் குழு சார்பாக சேமிப்பு கணக்கு தொடங்குவதற்கும் பயன் உள்ளதாக இருக்கும் என்றும் தெரிவித்தார்.தூத்துக்குடி வேள �ண்மை அலுவலர் ராஜா விளைபொருட்களை சேமிக்கும் காலத்தில் அதிக ஈரப்பதம் காரணமாக பூஞ்சானங்கள் மற்றும் பூச்சிகளினால் ஏற்படும் சேதாரங்களை தடுக்க சேமிப்பதற்கு முன் நெல் மணிகளை வெயிலில் நன்கு காய வைக்குமாறு கேட்டுக் கொண்டார்.இதற்கான ஏற்பாடுகளை ஸ்ரீவைகுண்டம் உதவி வேளாண்மை அலுவலர் (வேளாண் வணிகம்) மாடசாமி சொர்ணம் செய்திருந்தார்.

**கால்நடைக்கான தீவனப்புல் தயார்: திருவாரூர் கலெக்டர்**

திருவாரூர்: ""கால்நடைக்கு தேவையான தீவனப்புல் தேவையானவர்களுக்கு விற்பனைக்கு உள்ளது. விவசாயிகள் பெற்று பயனடைய வேண்டும்,'' என திருவாரூர் கலெக்டர் சந்திரசேகரன் கேட்டுக் கொண்டார். திருத்துறைப்பூண்டி அருகே உள்ள கொற்கை கால்நடை பண்ணையில் உம்பளச்சேரி இன பசுக்கள், கால்நடைகள் சிறப்பு வாய்ந்ததாகும். இங்கு தீவணப்புல் வளர்த்து விற்பனை செய்து வருகின்றனர். இதனை கலெக்டர் சந்திரசேகரன் பார்வையிட்ட பின், செய்தியாளர்களிடம் கூறுகையில், ""தீவணப்புல் நடவு கடந்த நவம்பரில் துவங்கப்பட்டது.

தற்போது அறுவடை செய்து விற்பனை செய்யப்படுகிறது. ஒரு கிலோ புல் ஒரு ரூபாய்க்கு விற்கப்படுகிறது. ஆயிரம் கருணை கொண்ட தீவணப்புல் நாற்று 140 ரூபாய்க்கு விற்கப்படுகிறது. விவசாயிகள் மற்றும் கால்நடை வளர்ப்போர் தீவணப்புல் கருணைகளை பெற்று பயனடைய வேண்டும்,'' என்றார். உம்பளச்சேரி இன கால்நடை வளர்ப்போர்கள் மற்றும் கால்நடை மருத்துவர்களிடம் பிரச்னை மற்றும் தேவைகள் குறித்து கலெக்டர் கேட்டறிந்தார். கால்நடைத்துறை இணை இயக்குனர் பழனியப்பன், உதவி இயக்குனர் அழகிரிசாமி, கால்நடை மருத்துவர் ராதாகிருஷ்ணன், பயிற்சி உதவி கலெக்டர் சங்கீதா உடனிருந்தனர்.

**வேளாண் விளைபொருட்கள் உற்பத்தியாளர் பயிற்சி முகாம்**

சோளிங்கர்:வேளாண் விற்பனை மற்றும் வணிகத்துறை சார்பில், நீர்வள, நிலவள திட்டத்தின் கீழ் வேளாண் விளைபொருட்கள் உற்பத்தியாளர் மற்றும் வாங்குவோர் பயிற்சி முகாம், காவேரிப்பாக்கத்தில் நடந்தது.கூட்டத்துக்கு, வேலூர் வேளாண்மை துணை இயக்குனர் கிருஷ்ணமூர்த்தி தலைமை வகித்து, நீர்வள, நிலவள திட்டம் குறித்தும், வேளாண் விற்பனை மற்றும் வணிகத்துறையின் பணிகள் குறித்தும் பயிற்சி அளித்தார்.

வேளாண்மை அலுவலர் சோமு, பொருள் உற்பத்தியாளர் குழு அமைத்தல், புரிந்துணர்வு ஒப்பந்தம் குறித்து பயிற்சி அளித்தார். வேலூர் மாவட்ட வேளாண்மை அலுவலர் சத்யபிரகாஷ், அறுவடைக்கு பின்பு தொழில்நுட்பம் மற்றும் வேளாண்மை வணிக மையம் செயல்பாடுகள் குறித்து பயிற்சி அளித்தார்.

கூட்டத்தில், வெங்குப்பட்டு ஆயில் மில் நிறுவனத்தாருடன் மணிலா விளைபொருள் உற்பத்தி செய்யும் விவசாயிகள் குழு புரிந்துணர்வு ஒப்பந்தம் செய்து கொண்டனர். இதில், காவேரிப்பாக்கம், சோளிங்கர், நெமிலி, அரக்கோணம், வாலாஜா ஒன்றியங்களை சேர்ந்த 50 விவசாயிகள் கலந்து கொண்டனர்.ஏற்பாடுகளை உதவி வேளாண்மை அலுவலர்கள் சந்திரசேகரன், ராமலிங்கம், சம்பத், ராஜேந்திரன், ஆகியோர் செய்திருந்தனர்.

**செஞ்சி ஒழுங்குமுறை விற்பனை கூட அவலத்தால் பொங்கல் கொண்டாட முடியாமல் விவசாயிகள் அவதி**

செஞ்சி : செஞ்சி ஒழுங்குமுறை விற்பனை கூடத்தில், நெல் மூட்டைகளை இறக்கி வைக்க இடமில்லாமல், நெல் மூட்டைகள் திருப்பி அனுப்பப்பட்டன.  பொங் கல் பண்டிகை நெருங்கிவிட்ட நிலையில், அறுவடை செய்த நெல்லை விற்பனை செய்ய முடியாமல், விவசாயிகள் அவதிப்பட்டு வருகின்றனர்.

விழுப்புரம் மாவட்டம், செஞ்சி தாலுகாவில், சம்பா பருவத்தில், ஒரு லட்சம் ஏக்கருக்கும் அதிகமாக நெல் சாகுபடி செய்கின்றனர். டிசம்பர் மாத இறுதியில் துவங்கி, பிப்ரவரி வரை அறுவடை நடக்கும். இந்த காலங்களில், செஞ்சி ஒழுங்குமுறை விற்பனை கூடத்திற்கு நெல் வரத்து அதிகரிக்கும். தமிழகத்தில் அதிக நெல் வரத்து உள்ள கமிட்டியாக உள்ள செஞ்சியில், சில ஆண்டுகளாக நெல் வரத்து அதிகரிக்கும் போது, விவசாயிகளைத் திருப்பி அனுப் புவது வாடிக்கையாகி உள் ளது. இதற்கு, மூட்டைகளை இறக்கி வைக்க போதிய இடமில்லை, மூட்டைகளை மாற்றுவதற்கு தொழிலாளர் பற்றாக் குறை என, பல காரணங் கள் கூறப்படுகிறது.

இந்த குறைகளைத் தீர்க்க, ஒழுங்குமுறை விற்பனை கூட நிர்வாகம், இதுவரை எவ்வித நடவடிக்கையும் எடுக்கவில்லை. இதனால், நெல் மூட்டைகளை கொண்டு வரும் விவசாயிகள், இரண்டு, மூன்று நாட் களுக்கு, கமிட்டி வளாகத் தில் இரவு, பகலாக காத்திருக் கும் அவலம் தொடர்கிறது. நேற்று, செஞ்சி ஒழுங்கு முறை விற்பனை கூடத் திற்கு, 20 ஆயிரம் மூட்டை அளவிற்கு விற்பனைக்கு வந்தன. இதில், 15 ஆயிரம் மூட்டை அளவிற்கு கமிட் டிக்குள் அனுமதித்தனர். மீதம் உள்ள மூட்டைகளை இறக்கி வைக்க இடம் இல் லாமல், திருப்பி அனுப் பினர். அனுமதிக்கப்பட்ட மூட்டைகளிலும், ஆறாயிரம் மூட்டை அளவிற்கே ஏலத்தில் அனுமதித்தனர். மீதம் இருந்த மூட்டைகளை இன்று ஏலத்திற்கு அனுமதிக்க உள்ளனர். எனவே, இன்று விவசாயிகள் புதிதாக நெல் கொண்டு வரவேண்டாம் என கமிட்டி நிர்வாகத்தினர் அறிவித்துள்ளனர்.

சனி, ஞாயிறு கமிட்டி விடுமுறை என்பதால், திங்கள் கிழமையன்று கூடுதலாக நெல் வரத்து இருக்கும் என்பதால், மறு நாள் மூட் டைகளை அனுமதிப்பதற் கான வாய்ப்பு குறைவு. 13ம் தேதி பொங்கல் பண்டிகை விடுமுறை துவங்குகிறது. மீண்டும் 18ம் தேதியே விவசாயிகள் நெல் மூட் டைகளை விற்பனை செய்ய முடியும். அறுவடை செய்த நெல் விற்ற பணத்தில் பொங்கல் கொண்டாட நினைத்திருந்த விவசாயிகளுக்கு, நெல்லை விற்பனை செய்ய முடியாத நிலை ஏற்பட்டிருப் பது கவலையை ஏற்படுத் தியுள்ளது.

**வனக்கழக முந்திரி மகசூல் ரூ. 5.59 லட்சத்திற்கு ஏலம்**

உளுந்தூர்பேட்டை : உளுந்தூர்பேட்டையில் வனத்தோட்ட கழகத்திற்கு சொந்தமான பகுதியில் முந்திரி மகசூல் சேகரம் செய்ய ஏலம் விடப் பட்டது. விழுப்புரம் மாவட்டம் உளுந்தூர்பேட்டை வனத்தோட்ட கழக சரக அலுவலகத்தில் நேற்று முன்தினம் முந்திரி மகசூல் சேகரம் செய்துக் கொள்ள ஏலம் நடந்தது. விழுப்புரம் மண்டல மேலாளர் குருசாமி ஏலத்தை நடத்தினார். விழுப்புரம் மண்டலத் தில் உள்ள உளுந்தூர் பேட்டை, டி.குண்ணத் தூர், பண்ருட்டி சரகத்தை சேர்ந்த 96 யூனிட்களுக்கு ஏல அறிவிப்பு செய்யப் பட்டது. இதில் எட்டு யூனிட்டுகளுக்கு நேற்று ஏலம் கேட்கப்பட்டதில், 5 லட்சத்து 59 ஆயிரம் ரூபாய் வசூலானது. வனச்சரகர்கள் அப்புராஜ், தண்டபாணி, குணசேகரன் மற்றும் வன அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

**கால்நடை பாதுகாப்பு திட்ட சிறப்பு முகாம்**

அவிநாசி : அவிநாசி அருகே புஞ்சை தாமரைக்குளத்தில் கால்நடை பாதுகாப்பு சிறப்பு முகாம் நடந்தது. தமிழக முதல்வரின் கால்நடை பாதுகாப்பு திட்டத்தின் கீழ், புஞ்சை தாமரைக்குளத்தில் நேற்று காலை 7.30 மணி முதல் இலவச கால்நடை சிறப்பு முகாம் நடந்தது.அவிநாசி கால்நடை பராமரிப்புத்துறை உதவி இயக்குனர் சண்முகம் தலைமையில், நோய் புலனாய்வு பிரிவு கால்நடை உதவி மருத்துவர் சங்கர், டாக்டர் பத்மாவதி, அவிநாசி கால்நடை உதவி மருத்துவர் பரிமள ராஜ்குமார் மற்றும் கால்நடை ஆய்வாளர் பாசுமணி ஆகியோர் கொண்ட மருத்துவக்குழுவினர் கால்நடைகளுக்கு சிகிச்சை அளித்தனர்.முகாமில் 380 கால்நடைகளுக்கு தடுப்பூசி; 43 கால்நடைகளுக்கு சிகிச்சை; 751 கால்நடைக்கு குடற்புழு நீக்கம்; 20 கால்நடைகளுக்கு செயற்கை முறை கருத்தரிப்பு உள்ளிட்ட சிகிச்சைகள் அளிக்கப்பட்டன. முகாம் ஏற்பாடுகளை புஞ்சை தாமரைக்குளம் கவுன்சிலர் குமாரசாமி செய்திருந்தார்.

**விவசாயத்தை நவீனமயமாக்க மானியம்**

பொங்கலூர் : விவசாயத்தை நவீனமய மாக்க வேளாண்மைத் துறை மூலம் பல்வேறு மானியத் திட்டங்கள் செயல்படுத்தப் படுகிறது.

உலக நாடுகளில் உள்ள விவசாயிகள் நவீன இயந் திரங்களின் துணையுடன் விவசாயம் செய்கிறார்கள். இதனால், அவர்களால் வெற்றி அடைய முடி கிறது. நம் நாட்டில் தேவை யான நீர் வளம் இருந்தும் முறையாகப் பயன்படுத் தாத காரணத்தினால், ஏராளமான நீர் வீணாவதுடன், உலக நாடுகளுடன் போட்டியிட முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. எனவே, உலக வங்கி நிதி யுதவியுடன் பரம்பிக் குளம் ஆழியாறு வடிநிலங்களில், பாசன வசதி பெறும் பகுதி களில் 2007 -08 ம் நிதியாண் டிலிருந்து "நீர்வள நிலவளத் திட்டம்' செயல்படுத்தப்படு கிறது. நீர் வளம் குறைந்த பகுதிகளில், விவசாயத்தில் நவீனத்தைப் புகுத்தினால் மட்டுமே விவசாயிகளின் வாழ்க்கை வளம் பெறும்; உணவு உற்பத்தியைப் பெருக்கி, பெருகி வரும் மக்களுக்கு உணவளிக்க முடியும். விவசாயத்தை மேம் படுத்த அரசு பல்வேறு மானியத் திட்டங்களை அறிவித்துள்ளது.

மானியத் திட்டங்கள் பற்றி திருப்பூர் வேளாண்மை செயற் பொறியாளர் ஜெகநாதன் கூறியதாவது: சொட்டு நீர், தெளிப்பு நீர்ப் பாசனம் அமைக்கும் விவசாயிகளுக்கு மொத்தத் தொகையில், எக்டருக்கு 65 சதவீதம் மானியம் வழங்கப் படுகிறது. புதிய டிராக்டர் மற்றும் புதிய பவர் டிரில் லர் வாங்குவதற்கு 45 ஆயி ரம் ரூபாய் மானியமாக வழங்கப்படுகிறது. சுழல் கழப்பை வாங்க 40 சதவீதம் மானியம் வழங்கப்படு கிறது; அதிக பட்சமாக 20 ஆயிரம் ரூபாய். 18-20 குதிரைத்திறன் கொண்ட நான்கு சக்கரத்துடன் கூடிய களையெடுக்கும் கருவி வாங்க ஒரு லட்சத்து 25 ஆயி ரம் ரூபாய் வரை மானியம் வழங்கப்படுகிறது.

10 குதிரைத்திறனை விட குறைவாக உள்ள இரண்டு சக்கரத்துடன் கூடிய களை யெடுக்கும் கருவி வாங்க 50 ஆயிரம் ரூபாய் வரை மானி யம் வழங்கப்படுகிறது. பழைய மின் மோட்டார் பம்செட்டுகள் மாற்ற, அதிகபட்சமாக 12 ஆயிரம் ரூபாய் மானியமாக வழங் கப்படுகிறது. மேலும், செயின் புல்டோசர், டிராக்டர், பாறை வெடி கருவி போன்றவை வாடகைக்கு கிடைக்கிறது. இவ்வாறு, ஜெகநாதன் தெரிவித்தார்.

தினகரன்

---

**மேட்டூருக்கு நீர்வரத்து குறைந்தது**

பதிவு செய்த நாள் 1/8/2010 12:32:34 AM



மேட்டூர் : காவிரி நீர்பிடிப்பு பகுதிகளில் மழை இல்லாததால், மேட்டூர் அணைக்கு வரும் நீரின் அளவு தொடர்ந்து குறைந்து வருகிறது. நேற்று மாலை அணைக்கு விநாடிக்கு 2,503 கனஅடியாக இருந்த நீர்வரத்து, நேற்று மாலை விநாடிக்கு 2,157 கனஅடியாக குறைந்தது.

காவிரி டெல்டா பாசனத்துக்காக அணையில் இருந்து விநாடிக்கு 12,411 கனஅடி தண்ணீர் திறக்கப்பட்டு வருகிறது. அணைக்கு வரும் நீரின் அளவை விட, பாசனத்துக்கு திறக்கப்படும் நீரின் அளவு அதிகமாக இருப்பதால், அணையின் நீர்மட்டம் குறைந்து வருகிறது. நேற்று முன்தினம் 88.61 அடியாக இருந்த நீர் மட்டம், நேற்று மாலை 87.62 அடியாக குறைந்தது.

**வேளாண் பல்கலை.யில் மலர் கண்காட்சி**

பதிவு செய்த நாள் 1/8/2010 12:30:52 AM



கோவை : கோவை வேளாண் பல்கலைகழகத்தில் நாளை நடைபெற உள்ள மலர் கண்காட்சியில், வெளிநாடு மற்றும் உள்நாட்டை சேர்ந்த 50 ஆயிரம் மலர்கள் இடம்பெறுகிறது. கோவை, தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழக பூங்காவில் 2 நாள் மலர் கண்காட்சி நாளை தொடங்குகிறது. அமைச்சர் வீரபாண்டி ஆறுமுகம் தொடங்கி வைக்கிறார். இதற்காக தென்ஆப்பிரிக்கா, ஹாலந்து, தாய்லாந்து, சிங்கப்பூர், நியூசிலாந்து மற்றும் இந்தியாவில் சிம்லா, புனே, பெல்காம், ஊட்டி, கொடைக்கானல், ஏற்காடு உள்ளிட்ட இடங்களில் இருந்து மலர்கள் வரவழைக்கப்பட்டுள்ளன. 200 ரகங்களில் 50 ஆயிரம் மலர்கள் அணிவகுக்கின்றன. ரோஸ், லில்லியம், கார்னேசன், ஜெர்பிரா, கிலாடிமோலஸ், ஆர்கிட், அந்தூரியம், ஆல்ஸ்டோமேரியா, ஹெலிகோர்னியா, ஆல்பீனியா போன்ற அரிய மலர்கள், துலிப், ஜிட்சோபில்லா, அலங்கார வாழைப்பூ ஆகியவை இடம்பெறுகின்றன. மக்களை கவரும் வகையில் 30 அடி நீளம், 20 அடி அகலத்தில் மலர் பனிமூட்ட அறை அமைக்கப்படுகிறது. பிரம்மாண்ட விமானம், பல்கலை நூற்றாண்டு விழா கட்டிடம் ஆகியவை மலர்களால் உருவாக்கப்படுகிறது. தமிழ் கலாசாரத்தை விளக்கும் வகையில் மலர் குடிசைகள், 100 ஆண்டு பழமையான 100 போன்சாய் மரங்கள் கண்காட்சியில் இடம்பெறுகின்றன. பல்கலைகழக மலரியல் மற்றும் ரோட்டரி சங்கத்தினர் இதற்கான ஏற்பாடுகளை செய்துள்ளனர்.

**தேசிய வேளாண் காப்பீட்டு திட்டத்தில் தமிழகத்திற்கு ரூ.1124 கோடி?ஒதுக்கீடு**

பதிவு செய்த நாள் 1/8/2010 1:35:47 AM

விருதுநகர் : தேசிய வேளாண் காப்பீட்டு திட்டத்தில் தமிழகத்திற்கு இதுவரை ரூ.1124 கோடி வழங்கப்பட்டுள்ளது என அக்ரிகல்ச்சர் இன்சூரன்ஸ் கம்பெனி மண்டல மேலாளர் அன்பரசு தெரிவித்தார். விவசாயிகளின் நலன் கருதி வானிலை அடிப்படையில் பயிர் காப்பீட்டு திட்டம் மாநிலத்தில் சேலம், தர்மபுரி, பெரம்பலூர், விருதுநகர், அரியலூர் ஆகிய 5 மாவட்டத்தில் ராபி 2009 பருவகாலத்தில் பரீட்சாத்த முறையில் அமல்படுத்தப்படுகிறது.

இத்திட்டத்தில் தேர்வு செய்யப்படும் ஒன்றியத்தில் பயிர்களின் பாதிப்பு பகுதி வாரியாக அறிவிக்கப்படும். இந்த பகுதிகளில் காப்பீடு செய்துள்ள அனைத்து விவசாயிகளும் நஷ்டஈடு பெற தகுதி உடையவர் ஆவர். காப்பீடு காலம் முடிவடைந்த சில நாட்களுக்குள் நஷ்டஈடு விவசாயிகளின் கணக்கில் வரவு வைக்கப்படும். நடப்பு பருவத்தில் நஷ்ட ஈடானது பயிரின் தட்பவெப்ப நிலையை பொறுத்து கணக்கிடப்படும்.

நஷ்டஈடு பெற விவசாயிகள் எவ்வித படிவமும் சமர்பிக்க தேவையில்லை. பயிர் கடன்பெறும் விவசாயிகள் அரசு ஆணைப்படி வங்கிகளால் கட்டாய அடிப்படையில் சேர்க்கப்படுவர். பயிர் கடன் பெறாத விவசாயிகள் இத்திட்டத்தில் சேர விண்ணப்ப படிவத்தை பூர்த்தி செய்து வங்கி மூலம் காப்பீட்டு கட்டணத்தை செலுத்த வேண்டும். இந்நிறுவனம் இதுவரை ரூ.1124 கோடியை தமிழக விவசாயிகளுக்கு தேசிய வோளாண் காப்பீட்டு திட்டத்தில் அளித்துள்ளது. வானிலை காப்பீட்டு திட்டத்தில் குறைந்த, அதிகபட்ச வெட்பநிலை, ஈரப்பதம், காற்றின் வேகம், அதிகமான மழை ஆகியவற்றின் மூலம் பயிர்களுக்கான இயற்கை சேதாரங்களை கணக்கிட்டு நஷ்டஈடு அளிக்கப்படுகிறது.

இத்திட்டத்தில் சேர பயிர் கடன் பெறாத விவசாயிகள் கூட்டுறவு வங்கி மற்றும் வர்த்தக வங்கிகளை அணுகி பிரிமிய தொகையை செலுத்த வேண்டும்.

மக்காச்சோளம், எள், நிலக்கடலை, சூரியகாந்தி, தக்காளி, மா, வெங்காயம் போன்ற பயிர்களுக்கு ஜன.15¢ம் தேதியும், மிளகாய், பருத்தி பயிருக்கு ஜன.31ம் தேதியும், நெல் பயிருக்கு பிப்.28ம் தேதியும் கடைசி நாளாகும். மேலும் இதுகுறித்த விவரங்களுக்கு 94869&05534, 99437&63561 ஆகிய செல்போன்களில் தொடர்பு கொள்ளலாம். இவ்வாறு அவர் தெரிவித்தார்.